Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5-00

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 29 15 - 12 - 94 வியாழக்கிழமை ஓசை 300

## தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பெறுபேறு தாமதமாகும்

கடந்த வெள்ளியன்று கொழும்பில் வெளியாகிய க. பொ. த. (உ/த) பெறுபேறுகளில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் கணனி வழியாக ஒழுங்கமைக்கப்பட்டு முடிவடையாமையினால் பரீட்சார்த்திகளுக்கு இப் பெறுபேறுகள் தாமதமாகவே அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பரீட்சைத்திணைக்களம் தெரிவித்துள்ளது. இப் பெறுபேறுகள் மிகவிரைவில் ஒழுங்கமைக்கப்பட்டு முடிவடைந்தவுடன் நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. யாழ் கல்வித்திணைக்களம் மேற்படி தனிப்பட்ட பெறுபேறுகளை காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கும்படி பரீட்சைத்திணைக்களத்தைக்கேட்டுக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [பா,தி]

## தலைவர் பிரபாகரன் 'ரைம்'க்கு பேட்டி

# இனப்பிரச்சினை தீர்விற்கு சந்திரிகா அரசின் அணுகுமுறையையே எதிர்பார்க்கின்றோம்!

## நிலையான தீர்வே தமிழர் விருப்பம்

★ "இனப் பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் உறுதியான நிரந்தரமான தமது உரிமைகள் பாதுகாக்கப்பட்ட ஒரு சமாதானத் தீர்வையே விரும்புகின்றார்கள்"

★ "சிங்கள மக்கள் அமைதியை ஏற்படுத்தும் வகையில் சந்திரிகாவிற்கு பெரு வெற்றியைக் கொடுத்துள்ளார்கள் அந்த வெற்றிவாய்ப்பை அவர் எவ்வாறு பயன்படுத்துவார் என்று எதிர்பார்க்கின்றேன்"

இவ்வாறு ரைம் சஞ்சிகைகுத் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.



''ரைம்'' சஞ்சிகை தரைகர் அன்ட் த லேடி என்ற தலைப்பில் பிரசுரித்துள்ள தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் பேட்டியை இங்கே தருகின்றோம்.

கேள்வி: அமைதி முயற்சிக்கு இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்பாக இருக்கமுடியுமா?

பதில்: ஆம், அப்படித்தான் ... சந்திரிகாவுக்கு பெரு வெற்றியை கொடுத்துள்ளார்கள். அந்த வெற்றி வாய்ப்பை சந்திரிகா பயன்படுத்துவார் என்று எதிர்பார்க்கிறேன். இவை அனைத்துமே அவரது நடவடிக்கையிலேயே தங்கியுள்ளது.

கேள்வி: ஜனாதிபதி சந்திரிகாவை பற்றி என்ன கருதுகிறீர்கள்?

... தில் உறுதியாக இருப்பதையே பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றேன்.

கேள்வி: இலங்கை இராணுவமும் சந்திரிகாவின் அமைதி முயற்சியை ஏற்றுக் கொண்டுள்ளதா?

பதில்: இராணுவம் அமைதிக்கு இடைஞ்சலாக இருக்கும் என்றே நான் உணர்கின்றேன். ஆயுத பேரங்கள் ...

கேள்வி: முன்னைய போர் நிறுத்தங்களை உங்களை பலப்படுத்துவதற்கு நீங்கள் பயன் படுத்தவில்லையா?

பதில்: போர் நிறுத்த காலத்தில் இலங்கை இராணுவம் வெறுமனே கைகட்டி நிற்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா? போர் நிறுத்த ... படுகிறார்கள். இரு தரப்புமே தம்மைப் பலப்படுத்துகின்றன.

கேள்வி; மோதலை தமிழ் மக்கள் வெறுக்கிறார்களா?

பதில்: இது ஒரு பிரசாரம். தமிழ் மக்கள் உறுதியான, நிரந்தரமான தமது ...

## மோட்டார் ஊர்தி திருத்தும் நிலைய உரிமையாளருக்கு!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் ஊர்திகள் திருத்தும் நிலையங்களில் திருத்தம் செய்வதற்கென பொது மக்களால் ஒப்படைக்கப்படும் ஊர்திகள் மற்றும் ஊர்திகளின் அடிச் சட்டங்கள், ஊர்திகளின் இயந்திரம் யாவையும் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு தெரிவித்துள்ளது

எதிர்வரும் 18ந் திகதியிலிருந்து பதிவு செய்யப்படாத ஊர்திகள், ஊர்திகளின் (6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் குழுக்களுடன் சந்திரிகா ஆராய்வு

(கொழும்பு]

இனப்பிரச்சினைக்கான சமாதான தீர்வு காண்பதில் அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து ஆராய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாராளுமன்றத்திலிரு ... பேச்சுக்களுக்கு அவர் அழைத்துள்ளார்-

நேற்று பிற்பகல் இரண்டு மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இச் சந்திப்பு நடைபெறஇருந்தது இக்கட்சிகளைசேர்ந்த 17எம்.பிக்களை ...

முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்பாக இருக்கமுடியுமா?
பதில்: ஆம், அப்படித்தான் சிங்கள மக்கள் அமைதியை ஏற்படுத்தும் வகையில்

யுள்ளது.
கேள்வி: ஜனாதிபதி சந்திரிகாவை பற்றி என்ன கருதுகிறீர்கள்?
பதில்: சந்திரிகா அமைதியை ஏற்படுத்துவ

பதில்: இராணுவம் அமைதிக்கு இடைஞ்சலாக இருக்கும் என்றே நான் உணர்கின்றேன். ஆயுத பேரங்கள் தொடர்வதற்கு போர் நீடிப்பையே இராணுவம் விரும்புகின்றது.

ணுவம் வெறுமனே கைகட்டி நிற்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா? போர் நிறுத்த காலத்தில் தம்மைப் பலப்படுத்த அவர்கள் பெருமளவு ஆயுதக் கொள்வனவில் ஈடு

பதில்: இது ஒரு பிரசாரம். தமிழ் மக்கள் உறுதியான, நிரந்தரமான தமது உரிமைகள் பாதுகாக்கப்பட்ட ஒரு சமாதானத்தையே விரும்புகிறார்கள்.

அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து ஆராய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாராளுமன்றத்திலிருக்கும் தமிழ்க்கட்சிகளை அழைந்துள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ-பி-டி-பி ஆகியவற்றின் எம்பிக்களையே நேற்று பிற்பகல் இரண்டு மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இச் சந்திப்பு நடைபெறஇருந்தது இக்கட்சிகளைசேர்ந்த 17 எம்.பிக்களையும் ஜனாதிபதி சந்திரிகா சந்திப்பது இதுதான் முதற்தடவை எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அரசாங்க தரப்பு எம் பிக்க

(6ஆம் பக்கம் பார்க்க)

# பிரிகேடியர் பதிரகே ரயில் விபத்தில் மரணம்

## திட்டமிட்ட சதி எனச் சந்தேகம்

சிறிலங்கா இராணுவத்தின் நலன்புரிப் பிரிவின் தளபதி பிரிகேடியர் பதிரகே சாந்தனா பதிரன நேற்று முன்தினம் ரயிலினால் மோதுண்டு கொல்லப்பட்டார்.

கொட்டாவையில் அமைந்துள்ள புகையிரதகடவையொன்றை இவரது வாகனம் கடக்கும் போது வேகமாக வந்த ரயிலொன்றினால் அவரது வாகனம் மோதுண்டதில் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் அங்குமரணமானார்-

இவர் புகையிரத கடவையை கடக்கும் போது ரயில் வரும் நேரம் எனத் தெரிந்தும் ரயில் கடவை மூடப்பட்டிருக்கவில்லை என பொலிசார் கூறுகின்றனர்-

குறிப்பிட்ட புகையிரதக் கடவையின் காவலாளி யாரென்பது பற்றி பொலிசார் விசாரித்து அவரைத் தேடி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன-

இவ் விபத்து திட்டமிட்ட சதியாக இருக்கலாமென பொலிசார் சந்தேகிப்பதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன-

# எம்மீது பழி சுமத்தப்படுகிறது

கேள்வி: காமினி திசாநாயக்காவின் கொலை காரணமாக பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டனவா?

பதில்: அமைதி முயற்சிகள் மெதுவாகச் செல்கின்றன என்று நாம் குற்றம் சுமத்தவில்லை. சந்திரிகாவின் ஆர்வம் குறைந்துள்ளது என்றே கூறுகின்றேன். அவரது அடுத்த நடவடிக்கைக்கு நாம் காத்திருக்கின்றோம்.

கேள்வி- காமினி திசாநாயக்காவை நீங்கள் கொன்றீர்களா?

பதில்- இல்லை ஆனால் எம் மீது பழி சுமத்தப்பட்டுள்ளது.

கேள்வி- தற்கொலைப்படை பிரிவு உங்களிடமே உண்டு. வேறு குழுக்களிடம் இல்லையே

பதில்- (சிரித்தபடி ) யாராவது மத்திய கிழக்கின் கமாஸ் இயக்கத்தை பயன்படுத்தியிருக்கலாம்.

கேள்வி- சிலசமயம் நீங்களே இதற்கு பொறுப்பு எனக் கூறப்படும்போது சந்திரிகா உங்களுடன் எப்படி பேச்சுவார்த்தையை மேற்கொள்ளலாம்?

பதில்- அது அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும் நானல்ல.

கேள்வி- இந்த நான்கு வருடங்களில் பிரதேச எல்லைகளை நீங்கள் இழந்துள்ளீர்கள் ஆனபடியால் உங்களால் வெல்ல முடியாது என நினைக்கிறீர்களா?

பதில்- ஆப்கானிஸ்தான் வியட்னாம் போன்ற நாடுகளில் எல்லைகள் ஆக்கிரமிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் வாபஸ் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# எமது பிரச்சினை தீர்வது போன்றது

-நரசிம்மராவ்

சிறிலங்காவின் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதானது எங்களுக்குள்ள ஒரு பிரச்சினை தீர்க்கப்படுவதாகும் இவ்வாறு இந்தியப்பிரதமர்நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவுக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனுடன் பேசியே தீர்வு காண விரும்புகிறேன்

## சந்திரிகா குமாரதுங்கா 'ரைம்'க்கு பேட்டி

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானத்தை ஏற்படுத்தவே விரும்புகிறோம். இவ்வாறு ''ரைம்'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்

'த ரைகர் அன்ட் த லேடி' என்ற தலைப்பில் தேசியத் தலைவர் பிரபாகரனதும், ஜனாதிபதி சந்திரிகாவினதும் முறையே யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கண்ட பேட்டிகளை ''ரைம்'' பிரசுரித்துள்ளது

அப் பேட்டி வருமாறு:

கேள்வி- நீங்கள் இராணுவ நடவடிக்கையை தெரிவு செய்தீர்களா?

பதில்- ஏனைய நடவடிக்கைகள் தோல்வியடைந்தால் இராணுவ நடவடிக்கையை நான் நிராகரிக்கமாட்டேன். ஏனையவர்களை விட தமிழ் மக்கள் அமைதியை விரும்புகிறார்கள். அதே சமயம் சிங்கள மக்கள் குறித்தும் நாம் கவனிக்கவேண்டியுள்ளது. புலிகள் நாட்டு நலனை பாதிக்கும் செயல்களில் இறங்கினால் நாம் செயலில் இறங்கவேண்டும்.

கேள்வி- கௌரவத்துடன் கூடிய அமைதி என்று எதனை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்.

பதில்- இரு தரப்பினருக்கும் கௌரவத்தை ஏற்படுத்துவதையே கூறுகிறேன். அதிகமான சலுகைகளை கொடுத்துவிடுவோம் என்று சிங்கள மக்கள் கருதுகிறார்கள். ஆனால் தமக்கு குறைவான சலுகைகளை அரசு வழங்கிவிடும் என்றும் தமிழ் மக்கள் கருதுகிறார்கள் தமிழர்களுக்கு கல்வி வேலை

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு; யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முதலிடம்

## பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நடத்தப்பட்ட இவ்வாண்டுக்கான தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி தேசிய ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு 16,500 மாணவர்கள்தோற்றியிருந்தனர், இதில் ஏழுபாடசாலைகளைச் சேர்ந்த ஒன்பது மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் மிகுதிறன் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த சுதர்சனா மகேந்திரன் 8'டி'யைப்பெற்றதுடன் 710 புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன் தமிழ் மொழி பாடத்தில் ஆகக்கூடுதலான புள்ளியை (91புள்ளிகள்) பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமிழ் மொழிப் பாடத்தில் அதி கூடுதலான புள்ளியைப் பெற்றமையைப் பாராட்டி விடுதலைப் புலிகள் தமிழ் வளர்ச்சிக் கழகம் பணப் பரிசு வழங்கி கௌரவிக்கவுள்ளது.

# சிறப்புபெறுபேறுகள் பெற்ற 10பேருக்கு தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசு

[யாழ்ப்பாணம்]

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் தேசிய மற்றும் கோட்ட மட்டங்களில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்ட மேற்படி தேர்வில் தோற்றி தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களையும், கல்விக்கோட்டங்களில் முதல் இரு இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கே தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசில்களும், கல்வி மேம்பாட்டுப் பேரவையினது பரிசில்களும் வழங்கபபடவுள்ளன.

தேசிய மட்டத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி மாணவி சுதர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

**மலிவு விலையில்**
பாடசாலை உபகரணங்கள் கொப்பிவகைகள் 'கப்' மெழுகுதிரிபூச்சிகொல்லி (''இன்செக்ரிடஸ்ட்'') மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்குதகுந்தகழிவு வழங்கப்படும். கண்ணன்- கீதை மக்கள் வங்கி முன்பாக ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [10354]

**தவறிவிட்டது**
089016 இலக்க காசோலை 13.12.94 அன்று திருநெல்வேலிச் சந்திக்கும், ஆலடிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். நா. இரத்தினம், பத்திரிகை விற்பனையாளர், கோப்பாய் சந்தி. (10395)

**''இரும்புத்தகடு, தண்ணீர்த் தாங்கி''**
1½ நூல்கன 8×4 சதுர அடி இரும்புத் தகடுகள், ½'' 8×4 தகடு, 4 அடிகன சதுரத்தண்ணீர்த்தாங்கி, 8அடிஉயர உருளைத் தண்ணீர்த்தாங்கி விற்பனைக்குள்ளது. 'மில்க்வைற்' (சி-10901)

**மொத்த விற்பனை**
கிறிஸ்மஸ்சோடனை, அழகு சாதனப் பொருள்கள், றேடியோ, கைக்கடிகாரம், எவர் சில்வர்பிளாஸ்ரிக்பொருள்கள் பாடசாலை - தையல் உபகரணங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பொலித்தீன் வகைகளை மொத்த விலையில் பெற்றுக் கொள்ளுங்கள். ஜெயா அழகுமாடம், 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-10902)

**உடன் விற்பனைக்குண்டு**
டச் வீதி, சித்தங்கேணியில் வீடு கட்டக்கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு:- இ. கந்தசாமி, டச் றோட், சித்தங்கேணி. (10387)

## அதிபர்கள் கூட்டம்

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சித்தன் கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும். (41)

## நாடக பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

(தொல்புரம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு கழக சங்கானை வட்டத்தினரால் நாடகக் கலைஞரின் ஆற்றல் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் வட்டத்தைச் சார்ந்த நாடக கலைஞர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி வகுப்புகள் பரீட்சார்த்தமாக கடந்த ஞாயிறு காலை மூளாய் அ.மி.த.க பாடசாலை மண்டபத்தில் கலை பண்பாட்டுக் கழக வலிகாமம் கோட்டப் பொறுப்பாளர் திரு. பொழிலன் அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இப் பயிற்சி வகுப்புகள் வட்ட இணைப்பாளர் திரு.கலையரசன் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு நடுவப்பணியக நிகழ்ச்சிப் பொறுப்பாளர் திரு. வளநாடன் அவர்களால் நடாத்தப்பட்டது. குறிப்பிடத்தக்க அளவு கலைஞர்கள் வகுப்புக்களில் பங்கு பற்றினர் (41)

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF SCIENCE**

The Commencement of the First Semester (1993/94) for the 2nd, 3rd and 4th Year students and the 2nd Semester (1993/94) for the first year students have been postponed from 19. 12.94 to 27. 12. 94.
Registrar. (சி-10911)

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றமைக்காகப்

# பாராட்டுகிறோம்



**பே. மதிதரன்**
(உயர்தர மாணவர் மன்றத் தலைவர்)
**4 A**
மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்
தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம்



**அ. அலஸ்ரீன் குமார்**
(வர்த்தக மாணவர் மன்றத் தலைவர்)
**3A, B**
மாவட்ட மட்டத்தில் 15-வதுஇடம்



**க. சுதாகரன்**
(உதவி சிரேஷ்ட மாணவ தலைவர்)
**4 A**
மாவட்டமட்டத்தில்20-வதுஇடம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம், வர்த்தக மாணவர் மன்றம்.

**கனகரத்தினம் ம. ம. வி.**
**யாழ்ப்பாணம்** (10401)

# நினைவு கூருகின்றோம்...

## 15.12.1994

1985 -ம் ஆண்டு இதே தினத்தில் ஒத்தாச்சிமடம் பகுதியில் வீதிச்சோதனையில் ஈடுபட்ட சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **குஞ்சுத்தம்பி தங்கவேல்** (பாண்டிருப்பு -கல்முனை)

இதேசம்பவத்தில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

★ **சாந்தன்** (இராமக்குட்டி சாந்தகுமார் - பாண்டிருப்பு - கல்முனை)

1986 -ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

★ **சங்கரப்பிள்ளை இராசரட்ணம்** (அக்கரைப்பற்று - அம்பாறை)

1987 -ம் ஆண்டு பொலநறுவையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். சுதன்** (கந்தசாமி லோகநாதன் - தம்பலகாமம் - திருமலை)

முல்லைத்தீவு 4-ம்கட்டையில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் திருச்செல்வம்** (அந்தோனி குரூஸ் அல்போன்ஸ் - செல்வபுரம் - முல்லைத்தீவு)

1988- ம் ஆண்டு வடமராட்சி கிழக்கு, உடுத்துறைப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

வடமராட்சிப் பொறுப்பாளரான

**கப்டன் ராஜாராம்** (வீரகத்திப்பிள்ளை தர்மலிங்கம் - வெற்றிலைக்கேணி - வடமராட்சி)

யாழ் - கோப்பாயில் தேசவிரோதிகளால் பிடித்து செல்லப்பட்டு முகாமில் வைத்து கொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**அரசலிங்கம் தேவதாசன்** (ஊரெழு)

1992-ம்ஆண்டு மட்டு - தம்பிலுவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்துமேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சாஜகவேந்தன்** (அழகையா மோகன் - அக்கரைப்பற்று - அம்பாறை)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினராலும், இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10904)

யாழ் மாவட்ட வணிகர் கழகங்களின் இணையத்தின்

# முக்கிய அறிவித்தல்

நத்தார், புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு 17-12-1994, 18-12-1994, 24-12-1994 31-12 1994 ஆகிய முழு நாளும் யாழ் மாவ...

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை

டச் றோட், சித்தங்கேணி.
(10387)

Reg strar. (சி-10911)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
## அமைய பதில் (*Casual Substitute*)

# ஆயுள்வேத வைத்தியர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் இப்பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்கும் பின்வரும் தகைமையுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 21-12-94 பி.ப. 1 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**வயதெல்லை**

விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**கல்வி மற்றும் தகைமைகள்**

1. இலங்கை பல்கலைக்கழகத்தில்/ இலங்கை ஆயுள்வேதக் கல்லூரியில் ஆயுள்வேத மருத்துவத்துறைப் பட்டம் அல்லது டிப்ளோமா பட்டம் பெற்றிருப்பதுடன், ஒரு வருடம் ஆயுள்வேத கல்லூரியில் செயல்முறைப் பயிற்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் ஒன்றில் ஆயுள்வேத மருத்துவத்துறையில் பட்டதாரியாகவோ அல்லது டிப்ளோமா பட்டம் பெற்றவராகவோ இருப்பதுடன், ஆயுள்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அல்லது

3. ஆயுள்வேத மருத்துவசபையில் பதிவு செய்து பின் 10 வருட அனுபவமுள்ளவராக இருக்க வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார். தேவை ஏற்படின் செய்முறை பரீட்சையொன்று நடாத்தப்படும்.

**சேவை நிபந்தனை**

1. நிரந்தர வைத்தியர்கள் விடுமுறையில் நிற்கும் காலத்திலும், கிளை மருந்துச் சாலைகளிலும் கடமையாற்றுமாறு வேண்டப்படலாம்
2. சேவை தற்காலிகமானதும் அவசியம் ஏற்படும் வேளைகளிலுமே கடமையாற்ற வேண்டி வரும்
3. எக்காரணம் கொண்டும் நிரந்தர நியமனம் கோரமுடியாது.

**வேதன அளவுத் திட்டம்**

இப்பதவிக்குரிய வேதன அளவுத்திட்டம் நாளாந்தம் ரூபா 150/40-ம், அரசினால் வழங்கப்படும் படிகளும்.

நேர்முகப் பரீட்சை 23-12-94-ம் திகதி காலை 10 மணிக்கு இப்பிரதேசசபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் உரிய ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் சமுகமளிக்க வேண்டும்.

செ. ஸ்ரீநிவாஸன்
விசேட ஆணையாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.
09-12-1994

(சி-10908)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை
## (நெல்லியடி, உடுப்பிட்டி உப-அலுவலகங்கள்)
## 1987ம் ஆண்டின் 15வது இலக்க பிரதேச சபைகள் சட்டம்

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1995-ம் ஆண்டிற்கான ஆதனவரிக்கான மதிப்பீடும் ஆதனவரி அறவீட்டு விகிதமும் இவ்வாண்டுள்ளவாறே மாற்றமன்றி இருக்கும். 1995-ம் ஆண்டு முழுவதற்கும் உரிய வரித்தொகையை ஜனவரி மாதம் 31-ம் திகதிக்கு முன் செலுத்துவோரிற்கு 10% கழிவும், 1ம் 2ம் 3ம் 4ம் கந்தாயங்களுக்குரிய கட்டணங்களை முறையே ஜனவரி 31, ஏப்ரல் 30, யூலை 31, ஒக்ரோபர் 31க்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1ம், 2ம், 3ம், 4ம் கந்தாயங்களுக்கான வரி முறையே 31.3.95, 30.6.95, 30.9.95, 31.12.95 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தத் தவறுமிடத்து, குடியிருப்பு ஆதனங்கள் மீது பற்றாணைக் கட்டணமாக 15%மும் வியாபார நோக்கத்திற்குப் பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20%மும் அறவிடப்படும்.

ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட மாட்டாது. ஆதன உரிமையாளர்களும் அவர்கள் இல்லாதவிடத்து வாடகைக் குடியிருப்பாளர்களும் சம்பந்தப்பட்ட உப-அலுவலகத்துடன் தொடர்புகொண்டு நிலுவைகளைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

செ-ஸ்ரீநிவாஸன்,
விசேட ஆணையாளர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி,
12-12-1994

(சி-10907)

## விசேட பொதுக்கூட்டம்
### S. R. A. M O (T. U361) யாழ் கிளை

தாய்ச்சங்க நடவடிக்கை தொடர்பாக விவாதிப்பதற்காக 18-12-94 ஞாயிறு காலை 10.00 மணிக்கு யாழ் பிராந்திய மருந்துக்களஞ்சிய மேல் மாடியில் நடைபெறும். அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறேன்.

ந. சர்வானந்தா
தலைவர்

(10397)

னிட்டு 17-12-1994, 18-12-1994, 24-12-1994 31-12-1994 ஆகிய முழு நாளும் யாழ் மாவட்டத்திலுள்ள சகல வணிக நிலையங்களும்வியாபாரத்துக்காக திறந்திருக்கலாம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி

- செயலாளர்

(சி-10913)

## அறிவித்தல்

### தமிழீழ மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்

அப்புத்துரை புஸ்பராசா,
பாடசாலை ஒழுங்கை, தாவடி தெற்கு
வழக்காளி,

வழக்கு இல. பணம் 95/94 எதிர்

1- இராசா சிவஞானலிங்கம்
2. பெண் நல்லம்மா இராசா
இருவரும் சின்னமணிக்கடை,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
எதிராளிகள்.

மேற்படி எதிராளிகளிடமிருந்து தனித்தும் ஒருமித்தும் ரூபா. 183000/- அறவிடுவதற்காக மேற்படி வழக்கை வழக்காளி இந் நீதிமன்றில் கோப்பிட்டுள்ளார் என்றும் இவ்வழக்கின் 1-ம் எதிராளிக்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்க முடியாதுள்ளமையினால் இவ் விளம்பரத்தை செய்து 1-ம் எதிராளியின் சார்பில் அக்கறை கொண்டுள்ளவர்கள் எவரேனும் குறித்த 1-ம் எதிராளிக்கு எதிராக ஒருமுக விளக்கத்தை இந் நீதிமன்று நடாத்தி தீர்ப்பு வழங்கக் கூடாதென்பதற்கு ஏதேனும் காரணமிருப்பின் 1995-ம் ஆண்டு தை மாதம் 09-ந் திகதிக்கு முன்னர் இந் நீதிமன்றில் காண்பிக்குமாறு இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.

1994-ம் ஆண்டு மார்கழி மாதம் 14-ந் திகதி.

சின்னத்தம்பி சிவநேசன்
வழக்காளியின் சட்ட அறிஞர்

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று

(10402)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

அரசியலமைப்புத் திருத்தம்

## 350 யோசனைகள் ஆணைக்குழுவிடம்

(கொழும்பு)

அரசியலமைப்பை திருத்துவதற்காக - இதுவரை 350க்கும் மேற்பட்டயோசனைகள் இதற்கென நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளன.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை ஒழித்துக் கட்டப்பட வேண்டும், பாராளுமன்றத்துக்கு விரிவான அதிகாரங்களை வழங்க கூடிய வகையில் அரசியலமைப்பை திருத்த வேண்டும் என்பன போன்ற யோசனைகளும்முக்கியமாக நிர்வாக பரவலாக்கம் அமுலாக்கப்படவேண்டும்என்ற யோசனையும் கிடைக்கப்பட்ட யோசனைகளில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியை சந்திக்க

## ரஷ்ய ஆயுதவிற்பனையாளர் கொழும்பில் காத்துள்ளனர்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசால் இரத்து செய்யப்பட்ட ரஷ்ய ஆயுதகொள்வனவு தொடர்பாக ரஷ்ய ஆயுத விற்பனையாளர்கள் தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு தெளிவுபடுத்த கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திரஹோட்டலில் காத்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட சிரேஷ்ட படை அதிகாரிகளுக்கு இக்கொள்வனவு பற்றிய இரகசியங்களை அவர்கள் தெரிவிப்பர் என்றும் கூறப்படுகிறது.

## வேலை நிறுத்த தடுப்பு பொலிஸ் குழு அமைப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் வேலை நிறுத்தப் பிரச்சினைகளை தடுக்கும் வகையில் விசேட பொலிஸ் படை ஒன்றை அமைக்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார்.

சட்டபூர்வ தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கும் சதி நடவடிக்கைகளுக்கும் இடையே தெளிவான வரையறைஇருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். தற்போது நடைபெறும் பல தொழிற் சங்க வேலை நிறுத்தங்கள் அரசை கவிழ்க்க முன்னைய அரச ஆதரவாளர்கள் செய்யும் சதி என ஜனாதிபதி முன்னதாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தெகிவளை - கல்கிசையில் இயங்கிய 'மாபியா' பாணியிலான குழு கைது

தெகிவளை - கல்கிசைப் பகுதியில் பல வருடங்களாக ''மாபியா'' பாணியில் குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் அடங்கிய குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாலத்துறைப் பகுதியில் கைதான ஒருவரின் வாக்குமூலத்தைதொடர்ந்துஏனைய இருவரும் பாணந்துறை பகுதியில் வீடொன்றின் கூரையில் மறைந்திருந்தபோது கைதாகினர்.

கைதாகிய இந்நபர்கள் பாலியல் வன்முறை, சட்ட விரோத போதைவஸ்து கடத்தல், கொலை ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

## கிரேக்க கப்பல் மாலுமிகள் கொழும்பு நீதி மன்றில் புகார்

### மூன்று மாத சம்பளம் இல்லையாம்

(கொழும்பு)

கொழும்பு துறை முகத்து ... மாலுமிகளான 22 இலங்கையர்களும் 33 வெளிநாட்டவர் ... பணவுகள் வழங்கப்படவில்லை என கொழும்பு மேல் நீதிமன்றத்தில் புகார் செய் ...

இனப்பிரச்சினை தீர்வு விவகாரம்

## ஐ. தே க. அணுகிய விதம் மேற்குலகிற்குபிடிக்கவில்லை

- சந்திரிகா

(கொழும்பு)

கடந்தகால அரசாங்கத்தின் இனப்பிரசசினைத் தீர்வுக்கான போக்குகள் குறித்து அதிருப்தி கண்ட பிரான்ஸ், நெதர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் 91-92ஆண்டு காலப்பகுதியில் தங்கள் உதவிகளை இடைநிறுத்தியிருந்தன. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசின் விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் குறித்து ஐரோப்பிய சமூகம் மகிழ்ச்சியைத் தெரிவித்திருப்பதும் இதுதான் முதல்தடவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் விடுதலைப் புலிகளுடனான சிறிலங்கா அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பான இந்தியாவின் மனப்போக்கு தனக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்,

## பொருத்தமான சிவில் அதிகாரி கிடைக்கும்வரை ஹமில்டனுக்கு பதவி

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலர் பதவிக்கு பொருத்தமான சிவில் அதிகாரி கிடைக்கும் வரையில் அப் பதவியில் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவை நீடிக்க ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக இவ் அமைச்சிற்காக சிவில் அதிகாரியான தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியானபோதும் சந்திரானந்த டி சில்வா இதை ஏற்க மறுத்துவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக இராணுவ மட்டத்தில் ஊழல், விரயம் என்பவற்றை தவிர்க்கும் முகமாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் பதவிக்கு படை அதிகாரிகளுக்குப் பதிலாக சிவில் அதிகாரி ஒருவரை நியமிப்பது என பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு யோசித்திருந்தது தெரிந்ததே.

எம்.ஐ.ரக உலங்கு வானூர்திகள்

## சிறிலங்கா பாவனைக்கு ஏற்றதல்ல; ரஷ்ய நிறுவனம்கடிதம் எழுதியுள்ளது

புதிதாக தருவிக்கப்பட்ட எம். ஐ உலங்கு வானூர்தியின் இயந்திரங்களை தயாரிக்கும் ரஷ்ய நிறுவனமான பேர்ம் மோட்டர்ஸ் சிறிலங்கா விமானப் படைக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இத்தகைய எஞ்சின்களை இலங்கை போன்ற மத்திய கோடு நாடுகளில் பயன்படுத்த முடியாது என்றும் குறைந்த வெப்ப நிலை பிரதேசங்களான வட ரஷ்யாப் பகுதிகளிலேயே இவை சீராக இயங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் எம. ஐ ரக உலங்கு வானூர்திகளை சிறிலங்காவிற்கு வழங்கிய ரஷ்யநிறுவனமான உலான்உட் அவ்வுலங்கு வானூர்திகளில் மேற்படி என்ஜின்களை பயன்படுத்துவது குறித்து தம்மிடம் எந்த அனுமதியையும் பெறவில்லை என்றும் பேர்ம்மோட்டர்ஸ் நிறுவனம் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

உலங்கு வானூர்தி கொள்வனவு தொடர்பாக செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி உலங்கு வானூர்திக்கான சில உதிரிப்பாகங்கள் வந்து சேரவில்லை என்றும் சில உதிரிப்பாகங்கள் தரமற்றவை என்றும் கூறப்படுகின்றது,

ஒப்பந்தபடி உதிரிப்பாகங்களான உலங்கு வானூர்திக்கான இரு என்ஜின்கள், பிரதான கியர்பொக்ஸ், ஸ்வாஷ் பிளேட் என்பன கிடைக்கப் பெறவில்லை. அத்துடன் முதலாவது சீரமைப்புவரை 1000 மணிநேரங்கள் இயங்கக்கூடிய கியர்பொக்ஸ்க்கு பதில் 500 மணிநேரம் இயங்கக் கூடியவையே உலங்கு வானூர்தியில் பொருத்தப்பட்டிருக்கின்றது. மற்றும் உலங்கு வானூர்தியின் சில கருவிகளின் செயற்பாடுகளுக்கான வழிகாட்டு குறிப்புகளும் வழங்கப்படவில்லை.

தருவிக்கப்பட்ட உலங்கு வானூர்திஒன்றிற்கான30 தருப்பினர் அமரும் இருக்கைகள் அதற்கான பட்டிகள் என்பன காணப்படவில்லை. உலங்கு வானூர்தி கொள்வனவு செய்யப்பட்டு 30 நாள்களினுள் தருவதாக கூறப்பட்ட உலங்கு வானூர்தியின் மேல் விசிறிகளும் (மேலதிக) இதுவரை வழங்கப்படவில்லை என்றும் அக்கட்டுரையில் மேலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## பொருண்மிய நெருக்கடி அமைதிக்கு வற்புறுத்து

(கொழும்பு)

பொருளாதார துறையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாரிய தாக்கம் ஒன்றை எதிர்கொள்வதன் உடன் பிரதிபலிப்போ மீண்டும் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த அர ... ஆரம்பிப்பது தொடர்பாக ஆலோசிப்பதாக தெரிவிக்கப்பட்டபோதும் விசாரணை முடிவுறாத நிலையில் இச்சமாதான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு இதுவே காரணம் என அவ்வட்டாரம் சுட்டிக்காட்டியுள்ளது

## சமாதானம் குறித்த பேச்சு கைகலப்பில் முடிந்தது

(கொழும்பு)

அரசின் சமாதான முயற்சிகள் குறித்து கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இருவருக்கிடையே ஏற்பட்ட விவாதம் பெரும் கைகலப்பில் முடிந்தது:

கடந்தவாரம்மேற்படிஹோட்டலில் நடைபெற்ற விருந்தொன்றில் மூத்த கடற்படை அதிகாரி ஒருவருக்கும் பொதுமகன் ஒருவருக்கும் இடையில் அரசின் சமாதானப் பேச்சு குறித்த விவாதம் கைகலப்பில் முடிந்தது.

கடற்படை அதிகாரி தன்னை கடுமையாகத் தாக்கியதாக அப்பொதுமகன் கொடுத்த புகாரையடுத்து இது குறித்து விசாரிக்க கடற்படை விசாரணைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இப்பொதுமகன் முன்னைய அரசுக்கு சொந்தமான பாரிய தனியார் நிறுவனம் ஒன்றின் நிர்வாக இயக்குனர் எனக் கூறப்படுகின்றது.

## பாப்பரசர் விஜயத்தில் அமைதிக்கு அரசு விருப்பம்

(கொழும்பு)

இன்னும்சில வாரங்களினுள் பகைமையை நிறுத்தும் வகையில் அரசதுருப்புகள் தாக்குதல் நிறுத்தத்தை மேற்கொள்வர் என ஜனாதிபதியின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட சமாதானப் பேச்சுகள் நத்தார் தினத்தையொட்டி மீள ஆரம்பிக்கும் என அரசதரப்பில் கூறப்பட்டதாகவும் பாப்பரசரின் விஜயகாலத்தில் நாட்டில் அமைதி நிலையை நிலவச்செய்வதே அரசின் நோக்கம் என்றும் வெரித்தாஸ் வானொலி மேலும்தெரிவித்தது.

## சமுகம் தராபொலிசார் மீது சட்ட நடவடிக்கை

### 1500 பொலிசார் கடமைக்கு வரவில்லை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங் ... க்கு சுமார் மூவாயிரம் பொலிசார் டிசெம்பர் முதலாம் ...

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டிருந்த கிரேக்க கப்பலொன்றின் மாலுமிகளான 22 இலங்கையர்களும் 33 வெளிநாட்டவர்களும் தங்களுக்கு மூன்று மாதகால சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என கொழும்பு மேல் நீதிமன்றத்தில் புகார் செய்துள்ளனர்.

இது தொடர்பாக மாலுமி ஒருவர் கூறுகையில், உள்ளூர் முகவர் ஒருவருக்கு 25000 ரூபா பணம் கொடுத்து இந்த வேலையைப் பெற்றதாகவும் 3மாத சம்பளம் இல்லாததால் தங்களது குடும்பங்கள் கஷ்டமான நிலைக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஒன்றை எதிர்கொள்வதன் உடன் பிரதிபலிப்போ மீண்டும் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கத்தை நிர்ப்பந்தம் செய்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் முன்னர் நடைபெற்ற குண்டுவெடிப்பை தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தை அவ் குண்டுவெடிப்பு விசாரணையின் பின்னரே அதனை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு இதுவே காரணம் என அவ்வட்டாரம் சுட்டிக்காட்டியுள்ளது

பொருட்களின் விலைகுறைப்பு, மானியம் வழங்குதல், வரி அறவீடு விகிதம் குறைத்தல், வேலை நிறுத்தம், மற்றும் பொருளாதார தாக்கம் சர்வதேச ரீதியான அழுத்தங்கள் என்பனவே இப்பேச்சுவார்த்தைக்கு வழிகோலியது என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

## முறைப்படி அறிவிப்பின்றி பொலிசார் இடமாற்றம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஒருவரின் பாதுகாப்புக் குழுவில் கடமையாற்றிய உயர் அதிகாரி உட்பட பதினான்கு பேர் பொலிஸ் அவசர பிரிவுக்கோ அல்லது நிர்வாகப் பிரிவுக்கோ அறிவுறுத்தல் எதுவும் வழங்கப்படாமல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதனை ஒருவகையான சதியெனப் பொலிசாரின் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது. இப் பிரிவிக்குப் பொறுப்பதிகாரியான கொழும்பு பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்கு இவர்கள் யார் என்ற விபரம் தெரிவிக்கப்படாமலேயே இந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது- இவர்கள் அனைவரையும் உடனடியாக வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமை அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

## 1500 பொலிசார் கடமைக்கு வரவில்லை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்று இது வரை கடமைக்கு சமுகம் அளிக்க தவறிய பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப் போவதாக பொலிஸ் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது

வடக்கு கிழக்கு மாகாணங்களின் மன்னார், மட்டகளப்பு, வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு சுமார் மூவாயிரம் பொலிசார் டிசெம்பர் முதலாம் திகதி முதல் கடமை ஏற்க இருந்த போதும் சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேருக்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு கடமைக்கு சமுகம் அளிக்காமல் இருப்பதாகவும் இவர்கள் சுகவீனம் என்ற காரணம் காட்டி இதுவரை தமது கடமையை ஏற்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

# பூநகரி இராணுவ முகாம்எப்போதும் ஆபத்தான நிலையிலேயே உள்ளது

(கொழும்பு)

பூநகரியை விட ஆனையிறவுப் பாதையை திறப்பதே படையினருக்கு பாதுகாப்பானதாகலாம். பூநகரி பாதையை பொதுமக்களின் போக்குவரத்திற்கு திறந்து விடுவது என்பது பூநகரி இராணுவ முகாமின் மீதான அச்சுறுத்தலை அதிகரிக்கச் செய்யக்கூடியது ஆகும். இவ்வாறு சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெரிடி சில்வா ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

சண்டே டைம்ஸ் இதழில் அதன் இராணுவ ஆய்வாளர் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில்

விடுதலைப் புலிகள் ஆழம் குறைந்த நீரேரிப் பகுதியூடாக பூநகரி முகாமையடையலாம். முகாம் தாக்கப்பட்டால் மேலதிக படைகளை இராணுவம் பூநகரிக்கு அனுப்புவது கடினம். புலிகள்யாழ். கடனீரேரியை தம் கட்டுப்பாட்டினுள் வைத்துள்ளனர். இது ஆனையிறவிலிருந்து கிடைக்கக்கூடிய உதவியை தடுத்துவிடும். அத்துடன் கடற்படை படகுகள் மூலம் மேலதிக படைகளை கொண்டுவருவது என்பதும் சாத்தியமில்லை. ஏனெனில் திருமலையில் இருந்து கனரக கடற்படை கப்பல்கள் பூநகரி வந்தடைய பல மணிநேரம் பிடிக்கும். இலகு ரக விரைவு தாக்குதல் படகுகள் மூலமே இந் நடவடிக்கையில் கடற்படை ஈடுபடமுடியும் எனினும் கடந்த ஆண்டு இத்தகைய படகுகள் சிறப்பான பணியை அங்கு மேற்கொள்ள முடியாமற்போனது.

ஆகாய மார்க்கமான தரையிறக்கமும் நடைமுறை சாத்தியமற்றது. விடுதலைப் புலிகளின் கடும் இயந்திரத் துப்பாக்கிச் சூடுகளின் மத்தியில் பெறுமதிமிக்க உலங்கு வானூர்திகளை பயன்படுத்த விமானப்படை விரும்பாது.

இதனடிப்படையில் பூநகரி இராணுவ முகாம் படையினரின் நோக்கில் எந்நேரமும் ஆபத்தமான நிலையிலேயே உள்ளது. ஆனால் ஆனையிறவு இராணுவ முகாம் இப்பகுதியில் ஆபத்தற்ற நிலையிலேயே உள்ளதெனலாம்.

அங்கு இப்போது 5000 படைகள் நிலைகொண்டுள்ளனர். 25 சதுரமைல் பரப்பிற்கு கனரக பீரங்கிகளும் யுத்தடாங்கிகளும் பரவலாக நிறுத்தப்பட்டுள்ளன. புல்டோசர்கள் மூலம் அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண்கள் உண்டு. வெற்றிலைக்கேணியூடாக விநியோகமும் இம் முகாமிற்கு உண்டு.

இந் நிலையில் ஆனையிறவு முகாமினூடாக பொதுமக்கள் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டால் படையினர் மக்களை சோதனையிடுவது சுலபமாக இருக்கும் படையினருக்கு பாதுகாப்பானதாக இருக்கும். ஆனால் இதற்கு விடுதலைப் புலிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் என 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாணவருக்கு சலுகை

(வடமராட்சி)

இன்பருட்டி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த விலையில் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களின் கல்வி வசதி கருதி கொப்பிகள் பென்சில்கள் என்பன குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இன்பருட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு கடன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. (யோ)

முன்னாள் பொலிஸ் அதிகாரிமீதான

## சிறுமி பலாத்கார வழக்கு உயர் நீதிமன்றத்தில்

பதினான்குவயதுச்சிறுமியை பாலியல் பலாத்காரம் புரிந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் எல்ப்ஸ்டன் பெரேரா மீதான வழக்கு விசாரணை கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை இவ்வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. இதுவரை நடந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமியின் பாட்டி ஒருவரும் இரகசியப் பொலிசாரும் சாட்சியங்களை அளித்துள்ளனர்.

## முக்கிய எதிர்க்கட்சி பிரமுகருக்கு ஜனவரியில் திருமணம்

(கொழும்பு)

தற்போது எதிர்க்கட்சியில் இருக்கும் முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவர் எதிர்வரும் புது வருடத்தில் திருமணம் செய்துகொள்ள இருப்பதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

தற்போது பல்கலைக்கழகமொன்றில் விரிவுரையாளராக இருக்கும் இப்பெண், மணமகனின் முன்னைய தொகுதியை சேர்ந்தவர் எனவும் கூறப்படுகிறது.

புல்மோட்டை சம்பவம் தொடர்பாக

## பாதிப்புற்றோருக்குநஷ்டஈடு அமைச்சர் அஷ்ரப் முயற்சி

(திருகோணமலை)

புல்மோட்டையில் நான்கு கடைகளும், முப்பது வீடுகளும் படையினரால் தீக்கிரையாக்கப் பட்டுள்ளமையால் ரூபா 3 இலட்சம்வரை சேதம் ஏற்பட்டிருப்பதாகமதிப் பிடப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுத்தரும் முகமாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடு செய்த விசேட விமானத்தில் புல்மோட்டைக்கு நேரில் விஜயம் செய்த முஸ்லிம் காங்கிரசின் உயர்மட்டக்குழு அமைச்சர்அஷ்ரப்பை சந்தித்து விபரம் தெரிவித்துள்ளது அதைத்தொடர்ந்து அமைச்சர் அஷ்ரப் ஜனாதிபதி சந்திரிகாவை சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.

## ராணுவ சிப்பாய் ஒருவர் ஆயுதங்களுடன் ஓட்டம்

### பொலனறுவையில் சம்பவம்

பொலனறுவைப்பகுதியில் இராணுவப்பாதுகாப்பு பிரிவு ஒன்றில் கடமை புரியும், இராணுவத்தை சேர்ந்த ஒருவர் ரீ. 56 ரகத்துப்பாக்கிகளில் இரண்டு உட்பட மேலும் பல ஆயுதங்களை அபகரித்துக் கொண்டு தப்பியோடி இருப்பதாக கூறப்படுகிறது

ஜயந்திபுர பகுதியில் குடியிருக்கும் இவர் 120க்கும் அதிகமான ரவைகள் மற்றும் மகசின்கள், கைக்குண்டுகள், தொலை நோக்குக்கண்ணாடிகள் என்பவற்றுடன் தப்பியோடியிருப்பதாகவும் பொலிஸ் திணைக்களம் அவரைக் கைது செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது,

## மூக்குக் கண்ணாடி

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மொத்தம் 42 பேருக்கு மூக்குக்கண்ணாடிகளை அண்மையில் இலவசமாக வழங்கினர். (24)

# படையினரின் தேடுதல்கள் மட்டக்களப்பில் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியாக சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு அல்லது மூன்று தடவைகள் இத்தேடுதல் இடம் பெறுவதாகவும், தேடுதல் நடவடிக்கை நடைபெறும் தினத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாக பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலையும், அலுவலகங்களுக்கு செல்வோர் தமது கடமைகளுக்கு நேரத்திற்கு சமுகமளிக்க முடியாத நிலையும், தொழிலாளரின் நாளாந்த வாழ்வும் பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது. இத் தேடுதல் நடவடிக்கையின் போது படையினரிடம் சிக்குவோர்களும் தாக்குதல்களுக்கு இலக்காகுவதாகவும், கூறப்படுகிறது. அத்துடன் அத்தியாவசிய பொருட்கள் உட்பட பாவனைப் பொருட்கள் சகலதும் மட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## மருத்துவ விரிவுரை

இன்று வியாழன் மாலை 6 மணிக்கு சத்திரச்சிகிச்சைக்குபின் ஏற்படும் வலிக்கான சிசிச்சை என்ற தலைப்பில் யாழ் மருத்துவ சங்கம் ஏற்பாட்டில் நியூசிலாந்திலிருந்து வந்துள்ள மயக்க மருத்துவ துறை நிபுணர் டாக்டர் ஆர். ஜே. கனகசுந்தரம் விரிவுரை நிகழ்த்துவார். யாழ் போதனா மருத்துவமனை தாதிகள் பயிற்சி கல்லூரி மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறும்.

## கௌரவிப்பு விழா

குருதிக் கொடை வழங்கியவர்களைக் கௌரவிக்கும் விழா நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர் வரும் ஞாயிறன்று பிற்பகல் மூன்று மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

# பதுளை கலன் குறாப் தோட்டங்கள் பௌத்த விகாரைக்கு சொந்தமாகும்

## விகாராதிபதி கோரிக்கை

(பதுளை)

பதுளை கலன் குறாப் பகுதியைச் சேர்ந்த தோட்டங்கள் தற்போது சட்டரீதியாக விகாரைக்கு சொந்தமாகியுள்ளது இத்தோட்டங்கள்மீண்டும்குத்தகைக்கு வழங்கப்படமாட்டாது. விகாரை நிர்வாகம் தோட்டங்களைப்பொறுப்பேற்று நடத்தவுள்ளது. இவ்வாறு பண்டாரபுர ரம்புக்வெவ விகாராதிபதி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இத்தோட்டங்களை நிர்வகிப்பது தொடர்பாக பௌத்த சாசன அமைச்சின் மூலம் ஜப்பானியக் கம்பெனி ஒன்றுடன் பேச்சு நடத்தப்படும். இந்த தோட்டங்களில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் விரும்பினால் குடும்பமொன்றுக்கு தலா அரை ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்படும். அக்காணியில் அவர்கள் வீடுகட்டி சுதந்திரமாக வாழ முடியும் எனவும் தெரிவித்தார்.

கலன் குறாப் தோட்டங்கள் விகாரைக்கு சொந்தமாகியுள்ளது என்ற அறிவிப்பை தொடர்ந்து தொழிலாளர்கள் மத்தியில் எதிர்காலம் தொடர்பாக அச்சம் நிலவுவதும், இங்கு பணிபுரியும் சுமார் 800 குடும்பங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைக்கு செல்லாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## கோழிகள் திருட்டு

(கொழும்புத்துறை)

சுன்னாகம் மயிலங்காட்டில் உள்ள கோழிப் பண்ணை ஒன்றில் அண்மையில் இரவு நேரத்தில் பெரும் எண்ணிக்கையான கோழிகள் களவாக இனம் தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டு, வீட்டுக்காரர் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போது கோழிக்கூட்டை உடைத்தே திருடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## ஜெனரேற்றர் வழங்கல்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சுகாதார திணைக்களம் அண்மையில் யாழ். மாநகர சுகாதாரப் பகுதிக்கு ஜெனரேற்றர் ஒன்றை வழங்கியுள்ளது. (24)

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்-மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினால் நடாத்தப்படும் பாலர் பாடசாலையில்பிள்ளைகளை சேர்த்துக் கொள்ள விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை நிலையச் செயலாளரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்படுகின்றது. (22)

# பயிலுனர் ஆசிரியர் பரீட்சை 28-ம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

கடும் ஆசிரியர் பற்றாக்குறைநிலவுகின்ற தமிழ்மொழி மூலமான பாடசாலைகளில் தமிழ்மொழி மூலம் கற்பிப்பதற்கான பயிலுனர் ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம்திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

சுமார் 50 ,பரீட்சை நிலையங்களில் இப்போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் உரியகாலத்தில் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது (பா)(தி)

# நாயை அடித்துக் கொன்ற பஸ் சாரதி மீது தாக்குதல்

## வந்தாறுமூலையில் இராணுவத்தினரின்செயல்

(மட்டக்களப்பு)

இராணுவத்தினரின் நாய் ஒன்று பஸ் வண்டியில் சிக்கி இறந்ததினால் அந்த பஸ் வண்டி சாரதி இராணுவத்தினரால் நையப்புடைக்கப்பட்ட சம்பவம் வந்தாறுமூலையில் நடைபெற்றது;

மட்டக்களப்பிலிருந்து காலை வாழைச்சேனைக்கு சென்ற பஸ் வண்டி ஒன்று வந்தாறுமூலை வரும்வழியில் பிரதான வீதியில் இராணுவத்தினர் ரோந்து சென்று கொண்டிருந்தனர். இச்சமயம் இராணுவத்தினர் கூட்டி வந்த நாய் ஒன்று திடீரென வீதியின் குறுக்கே பாய்ந்ததால் பஸ்ஸில் சிக்கி கொல்லப்பட்டது. இதனால் பஸ்ஸை நிறுத்திய படையினர் சாரதியை கீழே இறக்கி தாக்கினர். நாயுக்கு நஷ்டஈடு தருமாறும் அத்துடன் அந்த நாயை கௌரமாக எடுத்துச் சென்று மட்டக்களப்பு டிப்போவில் ஒப்படைக்குமாறு உத்தரவிடவே சாரதியும் அவ்வாறே செய்தார்.

# ஏறாவூரில் துப்பாக்கி சூடு; நால்வர் பொலிசாரால்கைது

(மட்டக்களப்பு)

ஏறாவூரில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிசார் கூறியுள்ளனர். இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஏ. லக்சுமணன் என்பவர் கொல்லப்பட்டுள்ளார். இவர் ஐ. தே. கவின் தீவிர ஆதரவாளர் எனத் தெரிய வருகிறது. ரி-56 ரகத் துப்பாக்கியேஇச்சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும், இதனையடுத்து ஏறாவூர் பகுதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பொலிசாரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் கேந்திர நிலைகளிலும் பொலிசார் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

# யாழ்.கூட்.அபி. உதவி ஆணையாளர் அலுவலகத்தை மூடிவிடப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் இம் மாதம் 31 ஆம் திகதியுடன் மூடப்படவுள்ளது இதனை கிழக்கு மாகாணசபை கடந்த எட்டாம் திகதி மேற்படி அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளது.

இம்மகஜரில் யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி [illegible] அதில்குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் உத்தரவானது முன்னைய அரசு செய்த அதிகார பரவலாக்கல் என்றதிட்டத்திற்கு அமைவாகவே உள்ளதாகவும் மேற்படி திட்டம்

# சூதாட்டம் நடத்தினர் நீதிமன்றில் தண்டனை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் உள்ள சந்தையொன்றில் சட்ட விரோதமாக சூதாடியவர்கள் பணத்துடன் காவல் துறையினரிடம் அகப்பட்டுக் கொண்டனர். இவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை தொடர்ந்து குற்றப் பணம் அறவிடப்பட்டது.

தனங்கிளப்பு பகுதியைசேர் [illegible] மீன் சந்தையில் வைத்து சட்ட விரோதமாக சூநாட்டம் நடத்தினர். சாவகச்சேரி நீதிமன்றில்இவர்கள்முற்படுத்தபட்டபோது குற்றவாளிகள் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். அப்போது தலா 1000 ரூபா குற்றப்பணமாக கட்டும்படியும் தவறின் 40 நாட்கள் கட்டாய சமூக சேவை செய்யும்படியும் நீதியாளர் தீர்ப்பு


## வியாபாரிகளே!

கிறிஸ்மஸ்,பாடசாலை,எவர்சில்வர்,பிளாஸ்ரிக் பொருட்களையும் மற்றும்,

தையல் உபகரணங்கள், ரேடியோ, கைக்கடிகாரம், பொலித்தீன் வகைகள், அழகுசாதனப் பொருள்களை மொத்தமாகப்பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

### ஜெயா அழகு மாடம்

187 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சில்லறை வியாபாரம்

177 A மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10903)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
1975 - 12 - 08

தாயக மடியில்:
1993 - 11 - 26

### 2-ம் லெப். நிரஞ்சன்

மகாதேவன் சுதாகரன்
(திருமலை)

(செம்மலையில் இடம்பெற்ற விமானத்தாக்குதலில் விழுப்புண் அடைந்து 1993-11-26 அன்று இரவு 12மணியளவில் வீரச்சாவடைந்தார்)

திருமலை மண் பெற்ற மைந்தா!
உனக்கு நாம் சுதாகரன் எனப்பெயர் சூட்டி வளர்த்தோம்
13ஆவது வயதில் பிரபா அண்ணன் தலைமையில்
நிரஞ்சனாகி பாயும் புலியானாய்
தமிழீழ தாயகத்தின் விடிவிற்கோர்
வழிகாட்டியாகி வித்தானாய்.

1994-12-15 இன்று எமதில்லத்தில் நடைபெறும் சகலநிகழ்வுகளிலும் உற்றார், உறவினர், நண்பர்களையும், சகபோராளிகளையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

''உன் பிரிவால் துயருறும்''

மூடப்படவுள்ளது இதனை மூடுவதற்கான உத்தரவு வடக்கு-கிழக்கு மாகாண சபையிலிருந்து கடந்தஎட்டாம்திகதி இவ்அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்திஉதவி ஆணையாளர் அலுவலகங்களை மூடுதல் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் அறிவுறுத்தல்களும் என்றுகுறிப்பிடப்பட்ட மகஜர் ஒன்றினை வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடமையாற்றிவரும் உயர் அதிகாரிகள் இருவரையும் சிற்றூழியர்களையும் தவிர ஏனைய அனைத்து ஊழியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தளபாடங்களை பிரதேச செயலகங்களுக்கு வழங்குமாறும் ஆவணங்களை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு வழங்குமாறும் தாகவும் மேற்படி திட்டம் கடந்த ஆண்டு வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் அவை மீண்டும் அவ்அவ் மாகாண சபைகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் மேற்படி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கடந்த ஜனவரி முதல் யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகமும் இணைப்பு நடவடிக்கைகளில் மட்டுமே இதுவரைகாலமும் இயங்கி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் அலுவலகம் மூடுவது தொடர்பாக உதவி ஆணையாளர் கருத்துத்தெரிவிக்கையில் ''கூட்டுறவு அமைப்பு ஒரு தனியானது அவ்வமைப்பு பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமாக தேவைப்படும் ஒன்று'' என்றார்.

(சி)

# மலசல கூடங்கள் சீரான கவனிப்பில்லை

## நோயாளிகள் குறை

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்கள் பாவிக்கும் பல மலசல கூடங்கள் சரிவரக் கவனிக்கப்படாமல் இருப்பதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டோரும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் -மலசல கூடங்கள் இவ்வாறு சரிவர சுத்திகரிக்கப்படாமல் இருப்பதை நோயாளர்கள் வேதனையோடு சுட்டிக் காட்டியுள்ளனர்.

# குச்சவெளியில் 19 முஸ்லிம் கைதாகி பின் விடுதலை

(திருகோணமலை)

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில்-அண்மையில் இரு பொலிசார் சுட்டுக்கொல்லப்பட்டதை தொடர்ந்து படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் 19 முஸ்லிம் இளைஞர்கள் படையினரால் கைதாகினர்.

பின்னர் இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவித்து கைதாகிய முஸ்லிம் இளைஞர்களை விடுவித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஓய்வூதிய நிலுவை வழங்க ஏற்பாடு

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கு இதுவரை வழங்கப்படாதிருந்த நிலுவை கொடுப்பனவுகள் மார்கழி, தை மாதங்களில் வழங்கப்படவுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த 260 ரூபா ஐந்து மாத நிலுவை மார்கழி மாத ஓய்வூதியத்துடனும், மே மாதம் அதிகரித்த 200 ரூபா நிலுவை தை மாத ஓய்வூதியத்துடனும் வழங்க யாழ். செயலகத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (யோ)

## உப்பு உற்பத்தி ஊக்குவிப்பு

முல்லை மாவட்ட மாத்தலன் பகுதியில் பொதுமக்களிடமிருந்து உப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கைத்தொழில் பகுதியால் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இப் பகுதி மக்கள் குடும்பங்களாக அல்லதுகுழுக்களாக சேர்ந்து உப்பு சேகரிக்கும் போது நாளொன்றுக்கு 600 ரூபாமுதல்700ரூபா வரையில் சம்பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது. இப் பகுதியில் வாழும் அநேகமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதால் இவர்களின் குடும்பநிலையை அறிந்து நாளொன்றுக்கு 150 ரூபா முதல் 200 ரூபாவரையில் முற்பணமாக கொடுக்கப்படுகின்றது.

தனங்கிளப்பு பகுதியைசேர்ந்த ஆறுபேர் சாவகச்சேரி யும்படியும் நீதியாளர் தீர்ப்பு அளித்தார். (86)

# மூன்றாம் காலாண்டில் நோய்த்தாக்கம் குறைவு

(கொழும்புத்துறை)

யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் கடந்த ஜூலை, ஒகஸ்ட், செப்ரம்பர் மாதங்கள் உள்ளிட்ட மூன்றாம் காலாண்டில் 262 பேர் வயிற்றோட்டத்தினாலும், 125 பேர் நெருப்புக் காய்ச்சலினாலும் 13 பேர் செங்கண் மாரியினாலும் பாதிக்கப்பட்டனர்.

இதே வேளை முதலாம் காலாண்டில் வயிற்றோட்டத்தினால் 422 பேரும் நெருப்புக் காய்ச்சலினால் 270, பேரும் செங்கண்மாரியினால் 37 பேரும்;

இரண்டாம் காலாண்டில் வயிற்றோட்டத்தினால் 203 பேரும், நெருப்புக்காய்ச்சலினால் 157 பேரும், செங்கண் மாரியினால் 12 பேரும் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (24)


# நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## கல்வியாண்டு 95

ஆண்டு 6,7,8 ம் ஆண்டுகளுக்கான

பிரிவு III

ஆரம்பம்: (17.12.94) சனி

| | | |
|---|---|---|
| கணிதம் | : | மகேந்திரன் |
| | | வாமதேவன் |
| | | பரா |
| விஞ்ஞானம் | : | சண் |
| | | ஆனந்தி |
| தமிழ் | : | N.S. மணியம் |
| | | யோகராணி |
| சமூகக்கல்வி | : | சிவநேசன் |
| | | மயூரன் |
| ஆங்கிலம் | : | ரமேஸ் |
| | | தர்மலிங்கம் |

(சி-10891)


''உன் பிரிவால் துயருறும்''

ஐந்து சந்தி, நாவலர் வீதி,
781,கார்த்திகாபாடசாலைமுன்பாக,
1994-12-15

-குடும்பத்தினர்

(10386)

# ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
14-01-1975

தாயக மண்ணில்
26-11-1993

## 2 ம் லெப். ஈழவேந்தன்
(இராஜரெட்ணம் இராஜ்குமார்)
மண்டைதீவு- 8

அடிமை கண்டு நெஞ்சு துடித்தவன்
அன்னியன் படையை அகற்ற நினைத்தவன்
தலைவன் பணியில் தன்னை இணைத்தவன்
தமிழீழ மண்ணைக் காணத் துடித்தவன்
மண்டைதீவின் வீர மைந்தன் - இவன்
மண்பாசத்தினால் பாசறை சென்றவன்
பொங்கி எழுந்து போர்க்களம் புகுந்தவன்
பூநகரிப் போரினில் ஆகுதி ஆனவன்
ஈழத்தின் ஏட்டினில் காவியம் படைத்தவன் - இவன்
ஈழவேந்தனாகி நம் உள்ளத்தில் வாழ்கிறான்.

15-12-94இல் அவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் போராளிகள், உற்றார் உறவினர்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உன்நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

ஐந்து சந்தி,
687, யாழ்ப்பாணம்.

(10370)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



சிந்தனைக்கு

மகத்தான சாதனைகள் சாதிக்கப்படுவது வலிமையினால் அல்ல. விடா முயற்சியினால்
- யேம்லல் ஜான்சன்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2339 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## பாராட்டிற்குரியவர்கள்

எத்தனையோ சிரமங்கள், ஏமாற்றங்கள் என்பனவற்றின் பின் யாழ். மாவட்ட கல்விப் பொதுத்தராதர பத்திர உயர் தரப் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன. வெளிவந்த பரீட்சை முடிவுகள் ஒட்டுமொத்தமாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் முன்னேற்றகரமானதாக இருப்பினும், அதில் சில குறைபாடுகளும், இறக்கங்களும் இல்லாமல் இல்லை.

பரீட்சை முடிவுகளைப் பொறுத்து சகல துறையிலும் கணிசமான உயர்ச்சி காணப்படினும் வர்த்தகத் துறை வளர்ச்சி வீதம் குறிப்பிடும் படியான உயர்ந்த அளவில் உள்ளது. அதேசமயம் உயிரியல் துறை வளர்ச்சி வீதம் குறைந்தளவில் உள்ளதுஎன்றே பொதுவாக அனுமானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இருப்பினும் இவ்வாறான ஓரளவேனும் திருப்தியளிக்கக் கூடிய பெறுபேறுகளை ஈட்டிக் கொடுத்த மாணவர்கள் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஏனெனில் இவர்கள் அனைவரும் அநேகமாக இரண்டாம் கட்ட ஈழப்போரின் போதே தமது இரண்டு முக்கிய பரீட்சைகளையும்- க.பொ.த சா. பரீட்சையை- க.பொ.த. உ. பரீட்சையையும்- எதிர்கொண்டு வெற்றி பெற்றவர்கள் ஆகும்.

இக்கால கட்டமானது கல்விக்குரிய சகல வாய்ப்புக்களையும் சிறிலங்கா அரசாங்கம் பாழடித்த காலமாகும். ஒருபுறம் பொருளாதாரத்தடை, எரிபொருள்தடை என்பனவும், மறுபுறம் விமானக்குண்டு வீச்சு, ஷெல்தாக்குதல், இராணுவ நடவடிக்கை போன்றவற்றிலும் கல்வி முற்றாகவே அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தது. இந்த நிலையில் கல்வி கற்றுப் பரீட்சையை எதிர்கொண்டு வெற்றி பெறுவதென்பது இலகுவான காரியமல்லதான். இந்த வகையில் அதாவது இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில், ஆசிரியர்கள் ஆற்றியுள்ள அர்ப்பணிப்புள்ள சேவையே இப்பெறுபேறுகளின் உயர்விற்குக் காரணமாகும்.

அதிலும் குறிப்பாக இடம் பெயர்ந்த நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் வசாவிளான் மகாவித்தியாலயம், யூனியன் கல்லூரி போன்றவை குறிப்பிடத்தக்க சில பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டமை ஒரு சாதனை என்ற ரீதியிலேயே நோக்க வேண்டும். மற்று

# தமிழீழ பொதுக் கல்வி தேர்வு முடிவுகள்-1994

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் நடத்தப்பட்ட இவ்வாண்டுக்கான தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுப் பெறுபேறுகள் இன்று வெளியாகின்றன. 16,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றிய இப் பொதுக் கல்வித் தேர்வில் 7 பள்ளிகளைச் சேர்ந்த 9 மாணவர்கள் 8 பாடங்களிலும் மிகு திறன் தேர்ச்சி (Dதரம்) பெற்றுள்ளார்கள்.

தேசிய மட்டத்தில் முதல் 10 இடங்களையும், கல்விக் கோட்டங்களில் முதல் இரு இடங்களையும் பெற்று தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெறுகின்றவர்களின் பெயர்கள் தமிழீழத் தேர்வு ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளன. தேர்வின் பெறுபேறுகள் கல்விக் கோட்டங்களினூடாக பள்ளிகளுக்கு இன்று அனுப்பி வைக்கப்படுகின்றன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவியான சுதர்சனா மகேந்திரன் 710 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் முதலாமிடத்தையும், தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசையும், கல்வி மேம்பாட்டுப் பேரவையினரது பரிசுகளையும் பெறுகின்றார். இவர் தமிழ் மொழிப் பாடத்துக்கான ஆகக் கூடிய புள்ளிகளை (91 புள்ளிகள்)ப் பெற்று விடுதலைப் புலிகள் தமிழ் வளர்ச்சிக் கழகம் வழங்கும் பணப் பரிசையும் பெறுகின்றார்.

தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெற்று தமிழீழத் தேசியத் தலைவரினதும், கல்வி மேம்பாட்டுப் பேரவையினதும் பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெறுபவர்கள்:-

| மாணவர் பெயர் | பாடசாலை | புள்ளி | பெறுபேறு |
|---|---|---|---|
| சுதர்சனா மகேந்திரன் | யாழ்ப்பாணக் கல்லூரி | 710 | 8 டீ |
| நவரத்தினம் இரமணன் | யாழ். இந்துக்கல்லூரி | 698 | 8 டீ |
| யோகநாதன் சிவராம் | யூனியன் கல்லூரி | 697 | 8 டீ |
| சுகிர்தா நவரட்ணசிங்கம் | வேம்படி மகளிர்கல்லூரி | 686 | 8 டீ |
| கணேசநாதன் சிறிவிசாகன் | புனித கென்றியரசர் கல். | 680 | 8 டீ |
| சிவசோதி செந்தூரன் | யாழ். இந்துக் கல்லூரி | 679 | 7 டீ, 1சி |
| இராஜேந்திரன் திலீபன் | பரியோவான் கல்லூரி | 677 | 7 டீ, 1சி |
| புலேந்திரராசா திலீப்காந்த் | பரியோவான் கல்லூரி | 675 | 8 டீ |
| இராஜகுமாரசாமி-நிஷாந்தன் | சம்பத்திரிசியார்கல்லூரி | 673 | 7 டீ, 1சி |
| சங்கீதா பாலசுப்பிரமணியம் | சுண்டிக்குளி மகளிர்கல். | 666 | 6 டீ, 2-சி |

கல்விக் கோட்டங்களில் முதலிடங்களையும் பெற்று தமிழீழத் தேசியத் தலைவரினதும், கல்வி மேம்பாட்டுப் பேரவையினரதும் பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெறுபவர்கள்:-

**யாழ். கோட்டம்**
பிரதீபா குணராசா - வேம்படி மகளிர் கல்லூரி - 664
உருத்திரன் யூட்துஷ்யந்தன் - பரியோவான் கல்லூரி - 661

**நல்லூர் கோட்டம்**
அரசரத்தினம் ஐங்கரன் - யாழ். இந்துக்கல்லூரி - 664
பத்மநாதன் கஜன் - யாழ். இந்துக்கல்லூரி - 658

**தெல்லிப்பழைக் கோட்டம்**
அனிதா செல்வராசா - மகாஜனாக் கல்லூரி - 664
கெங்காதரன்-இந்திரமோகன் - யூனியன் கல்லூரி - 645

**சண்டிலிப்பாய்க் கோட்டம்**
சுஜாதா குமாரசாமி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி - 608
தாரணி குமாரசிங்கம் - மானிப்பாய் மகளிர் கல்லூரி - 567

**வேலணைக் கோட்டம்**
இராமச்சந்திரன் நாகரூபன் - வேலணை வைத்திலிங்கம் து.ம.ம.வி. - 553
யகப்பிரியா நடேஸ்வரன் - புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வி. - 531

**ஊர்காவற்றுறைக் கோட்டம்**
பரமேஸ்வரன் தவராஜா - யாழ்ரன் கல்லூரி - 533
ஸ்ரீவிஜயகௌரி கணபதிப்பிள்ளை-ஊர்காவற்றுறை புனித மரியாள் ம.வி - 507

**மருதங்கேணி கோட்டம்**
செல்வரட்ணம் வின்சன் மரியசெல்வம் - செம்பியன்பற்று அ.த.க.பா. - 501
சுகநா வெற்றிவேல் - ஆழியவளை சி.சி.த.க.பா. - 459

**பருத்தித்துறைக் கோட்டம்**
இந்திரலிங்கம் தெய்வேந்திரன் - ஹாட்லிக் கல்லூரி - 657
சிவராஜா சுதர்சன் - ஹாட்லிக் கல்லூரி - 642

**சங்கானைக் கோட்டம்**
சிவஞானரட்ணம் சிவகாந்தன் - யாழ்ப்பாணக் கல்லூரி - 657
கதிர்காமநாதன் ராஜசுதர்ஷன் - யாழ்ப்பாணக் கல்லூரி - 653

**கோப்பாய் கோட்டம்**
சிவேஸ் சின்னப்பெடியன் - அத்தியார் இந்துக் கல்லூரி - 622
தருமலிங்கம் சுதாகர் - இடைக்காடு ம.வி. - 621
அருணாசலம் ரவீந்திரன் - இடைக்காடு ம.வி. - 621

**உடுவில் கோட்டம்**
மிதிலா தர்மபாலன் - உடுவில் மகளிர் கல்லூரி - 618
சிந்துஜா இரத்தினசிங்கம் - உடுவில் மகளிர் கல்லூரி - 615

**சாவகச்சேரிக் கோட்டம்**
பிரமிலா சிறிகாந்தன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 650
அருளொளி லோகசுந்தரம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 638

**கரவெட்டிக் கோட்டம்**
அரியநாயகம் தயாபரன் - உடுப்பிட்டி அமெரிக்கன் மி. கல்லூரி - 644
நர்மதா சிவராஜா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி - 619

**பளைக் கோட்டம்**
இரட்ணகுமார் மோகனராஜகுமார் - பளை ம.வி. - 428
சின்னத்துரை பாலேந்திரன் - இயக்கச்சி அ.த.க.பா. - 425

**தமிழ் மொழி பாடத்தில் முதலாம் இடத்தைப் பெறுபவர்:**
சுதர்சனா மகேந்திரன் - யாழ்ப்பாணக் கல்லூரி - 91

**இரண்டாம் இடத்தைப் பெறுபவர்கள்:**
உமா இராசேந்திரம் - யாழ். வேம்படி மகளிர் கல்லூரி - 90
சுகுனாளினி கந்தையா - ,, ,, ,, ,, - 90
சஞ்சிதா தில்லைநாதன் - ,, ,, ,, ,, - 90
காயத்திரி அசோகன் - ,, ,, ,, ,, - 90
நடேசு சுபேந்தன் - மானிப்பாய் இந்துக் கல்லூரி - 90

**விஞ்ஞான பாடத்தில் முதலாமிடத்தைப் பெறுபவர்:**
சிவராஜா சுதர்சன் - ஹாட்லிக் கல்லூரி - 94

**கணித பாடத்தில் முதலாமிடத்தைப் பெறுபவர்:**
சிவசோதி செந்தூரன் - யாழ். இந்துக் கல்லூரி - 99

கிளிநொச்சி மாவட்ட பளை கல்விக் கோட்டம் தவிர்ந்த ஏனைய கோட்டங்களிலும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களினதும் தேர்வுப் பெறுபேறுகள் திங்கட்கிழமை அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன. இத்தேர்வுப் பெறுபேறுகளின் அடிப்படையில் பள்ளிகளில் க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் சனவரியில் தொடங்கவிருக்கின்றன.

# க.பொ.த.உ.த. பரீட்சை முடிவுகள் ஆகஸ்ட்-1994

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**
கணிதம்
சிறந்த பெறுபேறு
2 ஏ, பி, சி

உயிரியல்:
சிறந்த பெறுபேறு
பூ. கேமலதா ஏ 2சி எஸ்
ஏனைய பெறுபேறுகள்
ச. கிறிஸ்னேந்திரன் 3பி சி
க. சுந்தரேசன் 2பி 2சி

ஏ பி 2சி - 1
ஏ பி சி எஸ் - 2
தோற்றியோர் - 23
சித்தியடைந்தோர் - 16
வீதம் - 70

**சுண்டிக்குளி**

வர்த்தகம்:
சிறந்த பெறுபேறு
சண்முகநாதன் கலாவதனி
பி, 2சி, எஸ்
ஏனைய பெறுபேறு

தோற்றியோர் - 12
சித்தி - 8
வீதம் - 67

கலை

வெற்றி பெறுவதென்பது இலகுவான காரியமல்ல தான். இந்தவகையில் அதாவது இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில், ஆசிரியர்கள் ஆற்றியுள்ள அர்ப்பணிப்புள்ள சேவையே இப்பெறுபேறுகளின் உயர்விற்குக் காரணமாகும்.

அதிலும் குறிப்பாக இடம்பெயர்ந்த நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் வசாவிளான் மகாவித்தியாலயம், யூனியன் கல்லூரி போன்றவை குறிப்பிடத்தக்க சில பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டமை ஒரு சாதனை என்ற ரீதியிலேயே நோக்க வேண்டும். முற்று முழுதாக தமது வசதிகளை இழந்த நிலையில் இவர்கள் பெற்ற பெறுபேறுகள் முதன்மை பெறுகின்றன.

அடுத்ததாக கடந்த காலத்தைப் போன்று யாழ். மாவட்டத்தில் உள்ள முதன்மையான பாடசாலைகளும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளன இதில் ஹாட்லிக் கல்லூரியின் பெறுபேறு ஏனைய பிரபல பாடசாலைகளின் பெறுபேறுகளை விட முன்னணியில் உள்ளது என்றே கொள்ள வேண்டும். பிரபல பாடசாலையாக இருப்பின் போரினால் பெரும் பாதிப்பிற்குள்ளான ஹாட்லிக் கல்லூரி தனது தனித்துவத்தைஇந் நெருக்கடியின் மத்தியில் நிறைவு செய்திருப்பது ஒரு வகையில் அதன் சாதனை என்றே கூறவேண்டும்,

இதேசமயம், இப்பரீட்சை முடிவுகளில் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியதொரு அம்சமாக இருப்பது பரந்த அளவில் நல்ல பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றமையாகும். இந்த விடயத்தில் கரவெட்டி. விக்னேஸ்வரா, வசாவிளான் மகாவித்தியாலயம், யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி போன்ற பாடசாலைகள் பரீட்சைப் பெறுபேறுகளில் குறிப்பிடும்படியான சாதனைகளைப் புரிந்துள்ளன என்றே கூறலாம்.

இந்தவகையில் கல்வியில் ஓர் ஆரோக்கியமான வளர்ச்சியும், பரம்பலும் ஏற்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இது தனியாக இக் க. பொ. த. உயர்தர பரீட்சையில் மட்டும் தென்படவில்லை. கடந்த புலமைப் பரிசில் பரீட்சை முடிவிலும் இதனை அவதானிக்கக் கூடியதாகவே உள்ளது இந்நிலையில் இப்பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும் பாராட்டப் பட வேண்டியவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்வாறாக கடந்தவருடத்தைவிடபலபாடசாலைகள் முன்னேற்றகரமான முடிவுகளைப் பெற்றுக் கொண்ட போதும், சில பிரபல பாடசாலைகளின் முடிவுகள் சற்று வீழ்ச்சி கண்டுள்ளமையும் குறிப்பிடப்பட வேண்டியதாகவே உள்ளது. இந்நிலையானது பொதுவாகவே வருத்தமளிக்கும் விடயமாகும்.

இந்நிலயில், பரீட்சைப் பெறுபேறுகள் மகிழ்ச்சியும், வேதனைகள் நிறைந்ததாக இருப்பினும் நம்பிக்கையை அளிப்பவையாகவும் உள்ளன. இதில், வசதி வாய்ப்புக்கள் மறுக்கப்படினும், முயற்சியானது உயர்நிலைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் என்பது தெளிவாகவே உணர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் காலத்திலும் கல்விப் பெறுபேறுகளில் வளர்ந்து வரும் பாடசாலைகள் சாதனைகளை நிலை நாட்டவும், பிரபல பாடசாலைகள் தமது நிலையைத் தக்க வைக்கவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

# க.பொ.த.உ.த. பரீட்சை முடிவுகள் ஆகஸ்ட்-1994

### மானிப்பாய் மகளிர் கல்லூரி

**கணிதம்**
சிறந்த பெறுபேறு
2 ஏ, பி, சி
கயலினி கனகரட்ணம்
2 ஏ, பி, சி
தர்சினி மகேந்திரன்
பி, 3 சி
சித்தியடைந்தோர் - 2

**உயிரியல்**
சிறந்த பெறுபேறு
2 பி, 2 எஸ்
கௌரி செல்வராஜா
2 பி, சி, எஸ்
ஏனைய பெறுபேறு
பி, 2 சி, எஸ் - 2
சித்தியடைந்தோர் - 5

**வர்த்தகம்**
சிறந்த பெறுபேறு 3ஏ, எஸ்
வி. கலாவதி 3 ஏ, எஸ்
எஸ். ரஜீதா 4 பி
என்: யசோதரூபி ஏ 2 பி சி
பி. ரஜனி
2 பி, சி, எஸ்
ஏ குகாநந்தி
ஏ, பி, 2 சி
ஏனைய பெறுபேறு
ஏ, 2 சி, எஸ்

**கலை**
சிறந்த பெறுபேறு
ஏ, 2 பி, சி
என். சாந்தி ஏ பி 2சி
வி. ஈஸ்வரி
ஏ, 2 பி, சி
ஏனைய பெறுபேறு
ஏ, 2 சி, எஸ்

### இளவாலை மெய்கண்டான்

**கலை**
சிறந்த பெறுபேறு
ஏ, பி, சி, எஸ்
க. தயானந்தன்
ஏ, பி, சி, எஸ்
க. மதிவதனி
பி, 2 சி, எஸ்
சித்தியடைந்தோர் - 8

### வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி

**வர்த்தகம்**
சிறந்த பெறுபேறு
அ. சபேசன் 4 ஏ
ஏனைய பெறுபேறுகள்
ச. சத்திவடிவேல் 2ஏ 2பி
இ. சாமலை ஏ 3பி
க. சுஜீவன் 2ஏ பி சி
பி றிச்சட் 4 பி

**கலை:**
சிறந்த பெறுபேறு
மு. கிளடிஸ்நிர்மலா 2ஏ 2சி

**உயிரியல்:**
சிறந்த பெறுபேறு
பூ. கேமலதா ஏ 2சி எஸ்
ஏனைய பெறுபேறுகள்
ச. கிறிஸ்னேந்திரன் 3பி சி
க. சுந்தரேசன் 2பி 2சி

**கணிதம்:**
சிறந்த பெறுபேறு
ச. அஜித் 3ஏ பி
நா. கருணானந்தன் 3ஏ பி
ஏனைய பெறுபேறுகள்
த. வேணுகோபால் 2ஏ 2பி
இ. சுகந்தினி 2ஏ 2சி
தோற்றியோர் - 104
சித்தியடைந்தோர் - 65
வீதம் - 63

### புற்றளை மகாவித்தியாலயம்

**கலை**
இ. பாமினி 2சி 2 எஸ்
தோற்றியோர்-1
சித்தியடைந்தோர் -1

### வல்வை சிதம்பராக் கல்லூரி

**உயிரியல்**
எஸ். சிவபாலன்
3பி, சி

**கணிதம்**
ச. ரகுநாதன் ஏ, 2பி, சி

**வர்த்தகம்**
க. லோகநாதன் ஏ, பி, சி எஸ்

### வேலாயுதம் மகாவித்தியாலயம்

**உயிரியல்**
இ. இதயமனோகரசீலன்
2 பி 2 சி
அன்ரன் ராஜ்குமார்
பி 2 எஸ்
தோற்றியோர் - 6
சித்தியடைந்தோர் - 2
வீதம் - 33

**கணிதம்**
கோ. முகுந்தன்
ஏ பி 2 சி
ஏனைய பெறுபேறுகள்
ஏ பி சி எஸ் - 1
பி 3சி - 1
பி 2 சி எஸ் - 1
2 சி 2 எஸ் - 1
தோற்றியோர் - 11
சித்தியடைந்தோர் - 5
வீதம் - 41

**வர்த்தகம்**
சிறந்த பெறுபேறு
வி. கிருஷ்ணகாந்தன்
2 ஏ பி சி
ஏனைய பெறுபேறுகள்
ஏ 3பி - 1
2ஏ 2பி - 1
ஏ பி 2 சி - 1
ஏ பி சி எஸ் - 2
தோற்றியோர் - 23
சித்தியடைந்தோர் - 16
வீதம் - 70

### சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

**வர்த்தகம்**
சுதந்தரி தங்கவடிவேல்
பெறுபேறு
2 ஏ. பி. சி
பாடசாலையில் வர்த்தகப் பிரிவில் இரண்டாவது நிலையிலுள்ள இப்பரீட்சைப் பெறுபேறு நேற்றைய பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்

### இளவாலை கன்னியர் மட மகாவித்தியாலயம்

**கலை**
சிறந்த பெறுபேறு
பே. பிரபாகினி
ஏ. 2பி. சி
ஏனைய பெறுபேறுகள்:
ச. மரியயுடொக்சியா
ஏ. 3சி
கி. ஜெனட்
பி. 2சி. எஸ்
ஆ. கீதாராணி 4 சி
பெ. நித்தியவதனி 4 சி
தோற்றியோர் தொகை 29
சித்தியடைந்தோர்
தொகை 15
வீதம்: 51

### காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி

**கலை**
சிறந்த பெறுபேறு:
வி. கிருஷ்ணவேணி
2பி. 2சி

**வர்த்நகம்**
சிறந்த பெறுபேறு:
ம, சாந்தினிதேவி
2ஏ.சி. எஸ்
தோற்றியோர் தொகை: 14
சித்தியடைந்தவர்:
தொகை 11
வீதம் 78

### ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ்

**கலை:**
சிறந்த பெறுபேறு -
பிரான்சிஸ் ஜமுனாவாணி
2பி, சி, எஸ்
தோற்றியோர் - 2
சித்தியடைந்தோர் - 1
வீதம் - 50

**வர்த்தகம்:**
சிறந்த பெறுபேறு
சண்முகநாதன் கலாவதனி
பி, 2சி, எஸ்
ஏனைய பெறுபேறு
4சி- 2
தோற்றியோர் - 3
சித்தியடைந்தோர் - 3
வீதம் - 100

### யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயம்

**கலை**
சிறந்த பெறுபேறு
சிறீஸ்கந்தராசா யசோதரா
சி, 3 எஸ்
தோற்றியோர் - 1
சித்தியடைந்தோர் - 1
வீதம் - 100

### காரைநகர் தியாகராஜா மகா வித்தியாலயம்

**வர்த்தகம்:**
சிறந்த பெறுபேறு
தியாகலிங்கம் கருணைதேவா
3பி, சி
ஏனைய பெறுபேறுகள்:
பி, 2சி, எஸ் - 1
பி, சி 2எஸ் - 2
4சி - 1
தோற்றியோர் - 15
சித்தியடைந்தோர் - 15
வீதம் - 100

(இ)

### பளை மத்திய கல்லூரி

**உயிரியல்**
சிறந்த பெறுபேறு:
மு. மதிவாணி பி 2சி எஸ்.
ஏனைய பெறுபேறு,
சி 3எஸ்
தோற்றியோர் - 8
சித்தியடைந்தோர் - 2
வீதம் - 25

**கணிதம்**
சிறந்த பெறுபேறு:
ம. அருள்லிங்கம் 2சி எஸ்
தோற்றியோர் - 2
சித்தி - 1
வீதம் - 50

**வர்த்தகம்**
சிறந்த பெறுபேறு:
ம. பாமினி ஏ 3பி
ஏனைய பெறுபேறு:
2பி சி எஸ்
ஏ, 2சி, எஸ்
தோற்றியோர் - 12
சித்தி - 8
வீதம் - 67

**கலை**
சிறந்த பெறுபேறு;
இ. வினோதினி 2பி, 2சி
ஏனைய பெறுபேறுகள்:
3சி, எஸ் - 2
தோற்றியோர் - 14
சித்தியடைந்தோர் - 10
வீதம் - 71

(86)

## புலிகளின் குரல் நிகழ்ச்சிநிரல்

**1994. 12. 15**
**வியாழன் இரவு**

08. 01 - சொல்லுங்கள் பார்க்கலாம்
08. 10 - சித்த மருத்துவக் குறிப்புகள்
08. 20 - உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் ''நிரந்தரமாக கஷ்டப்பட வேண்டிய நிலை வேண்டாம்'' தனி நடிப்பு
08. 30 - செய்திகள்
08. 40 - ஏட்டிலிருந்து - 23. 10. 1994 வீரகேசரி சஞ்சிகையிலிருந்து ''சமாதானமே தேவை, உரிமைகள் அதற்கு உரமூட்ட வேண்டும்'' எனும் கட்டுரை
08. 50 - மலரும் மொட்டுக்கள்
09. 00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

**1994 12. 16**
**வெள்ளி காலை**

07. 02 - மாவீர வணக்கப்
07, 15 - மணியாரம்
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்
08. 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும்நிறைவுபெறும்.

# பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடியதாக புதிய அரசியல்யாப்பு இருக்கவேண்டும்

## இல்லாவிடில் பயனற்றது என்கிறார் வாசுதேவா

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணக்கூடியதாக புதிதாக வரையப்படவுள்ள அரசியலமைப்பை உருவாக்காவிடில் அதனால் எதுவித பயனும் கிடைக்கமாட்டாது-இவ்வாறு இரத்தினபுரி மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பு. விகாரமகாதேவி பூங்காவில் நடைபெற்ற சமாதான விழாவில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்: சிங்கள மக்கள் எவ்வளவுக்கு சமாதானத்தை அடியொற்றி செயற்படுகிறார்களோ அவ்வளவுக்கு நாம் சமாதானத்தை அண்மிப்போம். இந்நாட்டில் சமாதானத்திற்கான முதற்படியை எடுப்பது பெரும்பான்மை சிங்கள மக்களினதும் அவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்கத்தினதும் பொறுப்பாகும் எனத் தெரிவித்தார்.

# அமெரிக்க தூதரகம் முன் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## 'இரணவில' வானொலி நிலையத்திற்கு எதிர்ப்பு

[கொழும்பு]

இரணவில பகுதியில் அமைக்கப்பட்டு வரும் ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' வானொலி அஞ்சல் நிலையத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் புத்தமத பிக்குகளும் கத்தோலிக்க மதத்தலைவர்களும் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலாபம் மாவட்டத்திலுள்ள இவ் இரணவில பகுதியில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலி அஞ்சல் நிலையம் அமைக்க நிலம் ஒதுக்கப்பட்டபோதே சிங்கள மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களை ஆரம்பித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 3 இளைஞர் கைது

(கொழும்பு)

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் உத்தியோகபூர்வஇல்லத்துக்கு அருகிலுள்ள பிரதேசங்களில் தங்கியிருந்த வடபகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது-

பிரதி பாதுகாப்பு அமைச்சரின் உயிருக்கான அச்சுறுத்தல் பற்றி இவர்கள் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டு வாரக் கடன்

கூட்டுறவுச் சங்கங்களிற்கு பொருள் விநியோகத்தில் இரண்டு வார கடன் வழங்க யாழ். செயலகம் வாக்குறுதி அளித்துள்ளது என கூட்டுறவுச்சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்ட அத்தியாவசிய பொருள் விநியோகம் தொடர்பாக நேற்றுமுன்தினம் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இவ் வாக்குறுதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

இதில் கூட்டுறவுச்சங்க அதிகாரிகள் மற்றும் பல திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியிருந்தனர். (இ)

## மண்ணெண்ணெய் விநியோகம்

16-12-94 தொடக்கம் 19-12-94 வரை காலை 9மணிதொடக்கம் மாலை2மணி வரை வழங்கப்படும். இறுதிப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு 5 லீற்றரும் ஏனைய மாணவர்களுக்கு 3 லீற்றர் வீதம் வழங்கப்படும்.

மாணவர் அவை
தொழில் நுட்பக் கல்லூரி,
(10405) யாழ்ப்பாணம்.

காரைநகர்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

## முக்கிய அறிவித்தல்

வருடாந்தப் பொதுக் கூட்டம்

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளரிற்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறஉள்ளது.

இக் கூட்டம் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைமண்டபத்தில் நடைபெற உள்ள

## பிரபாகரனுடன்

வாய்ப்புக்களில் சமவாய்ப்பு வழங்கவேண்டும் தமிழ்மொழிக்குசம அந்தஸ்துவழங்கவேண்டும்

கேள்வி- அமைதி முயற்சிகளை நீங்கள் துரித கெதியில் மேற்கொள்ளுவதாக கூறப்படுகிறதே?

பதில்- அப்படி நான் நினைக்கவில்லை. முட்டாள்களைப்போல் நாங்கள் எந்த வேளையிலும் அவசரப் படவில்லை. அடிப்படை பிரச்சினைகளை ஆராய்ந்தே பேச்சுக்களை ஆரம்பித்திருந்தோம். ஆனால் அப் பேச்சுக்கள் குழம்பிப்போய் நின்றன.

கேள்வி- புலிகள் தம்மை பலப்படுத்தவே முன்னைய பேச்சுக்களை பயன்படுத்தினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பதில்- ஆம், புலிகள்இயக்கம் அப்படி செய்திருந்தது ஆனால் அன்றைய இலங்கை அரசு அவர்களிடம் நடந்துகொண்ட விதம் காரணமாகவும் அவர்கள் அப்படி நடந்திருக்கலாம். ஆனால் புலிகள் தமது நிலைப்பாடு மற்றும்

## இனப்பிரச்சினை

அதேபோன்று இராணுவம் தற்போது கிழக்கை ஆக்கிரமித்துள்ளது. ஆனால் அவர்களை வாபஸ்பெற நிர்ப்பந்திக்க முடியும். எல்லையை பிடிப்பது இலகுவான காரியம் ஆனால் எவ்வளவுகாலம் தாக்குப்பிடிக்க முடியும்?

# துணிவுள்ளவன் வெற்றிபெறுவான்

கேள்வி- சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஒரு சறுகல் நிலை கொடுப்பதாக பலர் கருதுகிறார்களே?

பதில்- இக் கேள்வியை மற்றப்பக்கம் நோக்கிப் பார்க்கலாமே. நாம் எவரையும் ஏமாற்றவில்லை. அவர்கள் தான் ஏமாற்ற எத்தனிக்கிறார்கள்.

கேள்வி- நீங்கள் மக்கள் முன் தோன்றுவது அரிதே?

பதில்- நான் மற்றைய தலைவர்களைப்போல் மேடைப் பேச்சுக்களிலும், அதனை ஒரு தொழிலாக கருதுவதிலும் செலவழிப்பதில்லை. எனக்கு பலமுக்கியவேலைகள் உண்டு.

கேள்வி- கடந்த இருபத்திரெண்டுவருடகாலமாக ஒரு கெரில்லாவீரராக என்ன அனுபவத்தைப் பெற்றுள்ளீர்கள்?

பதில்- துணிச்சலுடையவன் வெற்றி அடைவான் என்பதை அறிந்துள்ளேன்

# பாப்பரசரின் கொழும்பு வருகைக்கு நான்கு நிக்காயா பிக்குகள் எதிர்ப்பு

## நிகழ்ச்சிகளை பகிஷ்கரிக்கப் போவதாக அறிவிப்பு

(கொழும்பு)

பாப்பரசரின் சிறிலங்கா விஜயத்தின் போது - பாப்பரசர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை புறக்கணிக்கப் போவதாக - நான்கு நிக்காயாக்களைச் சேர்ந்த பிக்குகள் அறிவித்துள்ளனர்.

பாப்பரசர் அண்மையில் வெளியிட்டுள்ள புத்தகமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ள பௌத்த மதம் பற்றிய கருத்துக்கள் தமக்கு ஏற்புடையதல்ல என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரம்புக்கல விபுல்லகே மல்வத்தை நிக்காயா, பாலியத்த சந்தானகே அஸ்கிரிய இமியோ, பாகித்திய அமரபுர நிக்காயா, சிறிராமன நிக்காயா ஆகியவற்றை சேர்ந்த பிக்குகளே இவர்களாவர் எனவும் தெரியவருகின்றது.

## உதவி அதிகாரிகள் விவகாரம்

# அரசாங்கத்தின் முடிவிற்கு எதிராக அரச மருத்துவரின் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

கடந்த இரு வாரங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட உதவி வைத்திய அதிகாரிகளை அரசாங்க மருத்துவர்கள் அளவுக்கு சமனாக கருத அரசாங்கம் இணங்கியிருப்பதற்கு கண்டனம் தெரிவித்து அரச மருத்துவர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

உதவி வைத்திய அதிகாரிகளை கொண்ட குழுவொன்று சில தினங்களுக்கு முன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்து தங்கள் பிரச்சினைகளுக்கு இணக்கப்பாடு ஒன்றை பெற்றுக்கொகப்டமை தெரிநததே.

# வங்கக் கடல் பாதுகாப்பை பலப்படுத்துவதில் இந்தியா அக்கறை

வங்கக் கடலில் பாதுகாப்பு ஏற்பாடுகளை இந்திய அரசு பலப்படுத்தியிருப்பதாக இந்திய பாதுகாப்பு இணை அமைச்சர் மல்லிகார்ஜீனன் தெரிவித்துள்ளார்.

இதன்படி 3 நவீன படகுகளும் 6 இலகுரக விரைவு விமானங்களும் வாங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த 72 வெளிநாட்டுப் படகுகள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் இவற்றில் 28 இலங்கையைச் சேர்ந்தவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிறப்பு

சனா மகேந்திரன், யாழ் இந்துக் கல்லூரி மாணவன் நவ

# இந்தியா ஆராய்கிறதாம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு சம்பந்தமாக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு கொண்டுவர அனைத்து சாத்தியக் கூறுகள் பற்றி இந்திய அரசு பரிசீலித்து வருவதாகவும் இது குறித்து சிறிலங்கா அரசுடன் அணுகுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்

## எமது

சென்ற சிறிலங்கா வெளியுறவு அமைச்சரிடம் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேற்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் தலைவர் திரு சோ. விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் 23-12-94 வெள்ளிக்கிழமை மு.ப 9-00 மணிக்கு வட்டுக்கோட்டை மாவடியில் உள்ள காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இச் சங்கத்தின் பொதுச்சபை பிரதிநிதிகளால் தரப்பட்ட முகவரிக்கு நிகழ்ச்சி நிரல் கடித மூலம் அனுப்பப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாத பொதுச்சபை பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள சங்கத்தலைமை காரியாலயத்தில் நிகழ்ச்சி நிரல் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

13-12-94

க. நடராசா
செயலாளர்

(சி-10910)

## யாழ் வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப்பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையிலும் உள்ள கருமபீடங்களிலும், ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1. **சலுகை செய்திகள்** முதல்15சொற்களுக்கும் ரூபா 15/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்

2. **வழமைச் செய்திகள்** முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5/-ம் அறவிடப்படும்

3. **வியாபாரச் செய்திகள்** முதல்10 சொற்களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்படும்

(மேற்கூறப்பட்ட 1,2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா100/-ம், 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்)

**அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறிப்பிட்ட செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.**

மேலதிக விபரங்களை அந்த அந்த கருமபீடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-10872)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம், இலக்கத்திலுள்ள ஈழநாதம்பணிமனையில்1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பெறஉள்ளது.

இக் கூட்டம் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைமண்டபத்தில் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## சமூகம் தரவும்

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த கல்விக் கழக ஆசிரியர் அனைவரையும் நாளை காலை 9.00 மணிக்குக் கோட்டக் கல்விப் பணிமனையிற் சந்திக்குமாறு நல்லூர், யாழ்ப்பாணக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் கேட்டுக் கொள்கின்றார்.

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ். பல்கலைக் கழகத்தில் நாளை காலை 9.00 மணிக்கு வரலாற்று நூல் எழுதுவது சம்பந்தமாகநடைபெற இருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 23ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது. தயவு செய்து வரலாற்று நூல்களை எழுதுவதற்கு ஆலோசனை வழங்கக் கூடிய ஆர்வலர்களையும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஆசிரியர்களையும்கலந்து கொண்டு ஒத்துழைப்பு நல்குமாறு சமூகவியல் மன்றத்தினர் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சமூகம்தரக் கோரிக்கை

தேசிய கல்வி நிறுவன கல்விடிப்புளோமா பயிற்சி நெறியினை இந்துக் கல்லூரி நிலையத்தில் பயின்று, இறுதித் தேர்வினை எழுதிய சகல மாணவர்களையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் கேட்டுக் கொள்கிறார்.

கொண்ட விதம் காரணமாகவும் அவர்கள் அப்படி நடந்திருக்கலாம். ஆனால் புலிகள் தமது நிலைப்பாடு மற்றும் நடவடிக்கைகளில் மாற்றம் கொண்டு வருவார்கள் என்றே நாம்எதிர்பார்க்கின்றோம் தன்னை முழு அளவில்போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்திய பலஸ்தீன இயக்கம் ஜனநாயக உலகிற்குள்பிரவேசித்துள்ளது. இந் நிலையில் புலிகளும் அப்படிச் செய்ய முடியும் என்றே கருதுகிறேன்.

கேள்வி- காமினி திசாநாயக்காவின் கொலையுடன் புலிகள் சம்பந்தப்பட்டதாக காணப்பட்டால் என்ன செய்வீர்கள்?

பதில்- புலிகள் பொறுப்பாளிகள் என அறியப்பட்டால்அவர்கள் முக்கிய எதிர்க்கட்சித் தலைவரைக் கொலை செய்தார்கள் என்பதை நாம் மறுக்கமுடியாது.சரியாகவோ அல்லது தவறுதலாகவோ வேறு கொலைகள் தொடர்பாகவும் அவர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள் இந் நிலையில் அவர்களது நிலைப்பாடு அதுதானென்றால் அமைதி முயற்சிகள் குறித்து நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

கேள்வி- புலிகளைப்பற்றி என்ன கருதுகிறீர்கள்?

பதில்- நல்ல கட்டமைப்புடன் கூடிய பலம் வாய்ந்த, திறமையான கெரில்லா இயக்கமாகவும்-முட்டுக்கட்டைகளை பொருட்படுத்தாது தனக்கு வேண்டியவைகளை செய்ய அந்த இயக்கம் உறுதியாக நிற்பதை காண முடிகின்றது.

கேள்வி- பிரபாகரன் இல்லாமல் சமாதானத்தை உங்களால் கொண்டுவர முடியுமா?

பதில்- யாழ்ப்பாண மக்கள் தமது தலைவராக பிரபாகரனை ஏற்க விரும்பினால் எனக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை. பிரபாகரனை கைது செய்யும் நோக்கமும் எமக்கில்லை. அப்படி எதுவும் இடம் பெற்றால் பின்னர் அமைதியை ஏற்படுத்தவே முடியாது போய்விடும்.

கேள்வி- அமைதியை முன்னெடுப்பதில் நீங்கள் ஏன் தீவிரம் காட்டுகிறீர்கள்?

பதில்- எனது பதினாலு வயதில் எனது தந்தையார் கொல்லப்பட்டார்.பின்னர் எனது கணவரின் கொலையும் எனது குடும்பத்தை உலுக்கி விட்டிருந்தது. இந் நிலையில் வன்முறைகள் பற்றி கசப்புணர்வுகளையே கொண்டுள்ளேன் எனத் தெரிவித்தார்.

### சிறப்பு

சனா மகேந்திரன், யாழ் இந்துக் கல்லூரி மாணவன் நவரத்தினம் இரமணன், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவன் யோகநாதன் சிவராம், வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சுகிர்தா நவரட்ணசிங்கம், புனித ஹென்றி அரசர் கல்லூரியைச் சேர்ந்த கணேசநாதன் சிறிவிசாகன், யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சிவசோதி செந்தூரன், பரியோவான் கல்லூரி மாணவர்களான இராஜேந்திரன் திலீபன் புலேந்திரராசா திலீப்காந்த் மற்றும் சம்பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த இராஜகுமாரசாமி நிஷாந்தன், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி சங்கீதா பாலசுப்பிரமணியம் ஆகியோரே தேசியத்தலைவரின் சிறப்புப்பரிசில்களையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் பெறவுள்ளனர்.

### மோட்டார்

அடிச்சட்டம், ஊர்திகளின் இயந்திரம் என்பன திருத்தும் நிலையங்களில் காணப்படின் அவற்றின் மீது காவல் துறையினரும், மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வர் எனவும் ஊர்திகள் திருத்தும் நிலைய உரிமையாளர்களின் கவனத்திற்கு போக்குவரத்து கண்காணிப்பு பிரிவின் மோட்டார் ஊர்திப்பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

சென்ற சிறிலங்கா வெளியுறவு அமைச்சரிடம் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.மேற்படி கருத்தை நான் தான் சொன்னேன் என்று நீங்கள் எங்கும் குறிப்பிட்டுச் சொல்லலாம் எனவும் பிரதமர் ராவ் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் தெரிவித்துள்ளார்

இதேவேளை இரணவிலவில் அமைக்கப்பட்டு வரும் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலி அஞ்சல் நிலையம் பற்றியும் கதிர்காமரது விஜயத்தில் ஆராயப்பட்டதாகவும் இவ் விடயம் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு தீவிரமாக கவனத்திலெடுக்கப்படும் என அவர் இந்திய அதிகாரிகளிடம் கூறியதாகவும் கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று தெரிவித்துள்ளது-

திய அரசு பரிசீலித்து வருவதாகவும் இது குறித்து சிறிலங்கா அரசுடன் அணுகுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் இந்திய வெளிவிவகார இணையமைச்சர் ஆர். எல். பாட்டியாதெரிவித்துள்ளார்.

நேற்று ராஜ்யசபாவில் எழுத்து மூலம் அளித்த பதிலொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்திய அரசின் பல்வேறு அமைப்புக்களும் இப்பிரச்சினை குறித்து பரிசீலித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

### தமிழக்குழுக்களுடன்

ளின் கூட்டத்தையும் அவர் நடத்த இருந்ததாகவும் இக் கூட்டத்துக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவையும் அழைக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது-

## மரண அறிவித்தல்

### செல்வி கந்தையா பரமேஸ்வரி

15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட செல்வி க. பரமேஸ்வரி 10-12-94-ல் ஜேர்மனியில் அகாலமரணமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா இளையபிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் சி. பூபதி, காலஞ்சென்ற சண்முகலிங்கம், குணசிங்கம், சுந்தரலிங்கம் (ஜேர்மனி), தர்மலிங்கம், அற்புதராணி ஆகியோரின் அருமைச் சகோதரியும், அ. ஸ்ரீஸ்கந்தராஜா, க. சின்னத்துரை, அஞ்சலா தேவி, உதயகலா (ஜேர்மனி), புவனமாலா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் மரணச் சடங்குகள் ஜேர்மனியில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

அ. ஸ்ரீஸ்கந்தராஜா,
15/11, புவனேஸ்வரி
அம்பாள் வீதி,
நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

அ. ஸ்ரீஸ்கந்தராஜா (மைத்துனர்)
க. தர்மலிங்கம் (சகோதரன்)
க. சின்னத்துரை (மைத்துனர்)

(10399)